viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 199 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 22 புதன்கிழமை (06.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## மண்ணெண்ணெய் விலை கட்டாயம் அதிகரிக்கப்படும்

### சபையில் எரிசக்தி அமைச்சர் காஞ்சன



(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் மண்ணெண்ணெய் விலையை கட்டாயம் அதிகரிக்க வேண்டியேற்படும் என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போது அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நாட்டு மக்களுக்கு, மின் 15

6 மாதங்களில்

## பொருளாதாரத்தை மீள கட்டியெழுப்ப முடியாது

### சபையில் அநுரகுமார



(கொழும்பு)

நான்கு தசாப்தங்களாகப் பயணித்த பொருளாதாரப் பாதையில் மிக மோசமான பாதிப்பு ஏற்பட்டுள்ள இவ்வேளையில் அதனை ஆறு மாதங்களில் மீளக் கட்டியெழுப்ப முடியாது என தேசிய மக்கள் சக்தியின் தலை 15

## ஆயிரம் பஸ்கள் புதிதாக சேவையில்

### அமைச்சர் பந்துல



(கொழும்பு)

அடுத்த வாரம் அளவில் புதிதாக ஆயிரம் பஸ்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சர 15

பாராளுமன்றத்தில்

# ரணில் - சஜித் கடும் தர்க்கம்



### சபையை இடைநிறுத்துவேன் என எச்சரித்த சபாநாயகர்

*(கொழும்பு)*

பாராளுமன்றில் பிரதமர் ரணிலும் எதிர்க்கட்சித் தலைவரும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனையடுத்து சபையை இடைநிறுத்த நேரிடும் என சபாநாயகர் எச்சரித்தார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

## எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து

### படையினரை அகற்றத் திட்டம்?

(கொழும்பு)

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆயுதப் படையினரை, அக்கடமைகளில் இருந்து அகற்றுவது தொடர்பில் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மைய நாட்களில் பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பதிவான சம்பவங் 15

## மக்களை மேலும் துன்பப்படுத்தாமல் ஜனாதிபதி பதவி விலக வேண்டும்

### பேராயர் கர்தினால் மீண்டும் வலியுறுத்து




(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மக்களை மேலும் துன்பப்படுத்தாமல் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தினார்.

"இந்த நெருக்கடியான நிலையில் இருந்து இந்த நாட்டை விடுவிப்பதற்கு மிகப்பெரிய தடையாக இருப்பது ராஜபக்ஷ குடும் 15

## திருக்கேதீச்சர பெருமானுக்கு

### இன்று மஹா கும்பாபிஷேகம்



## சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை வெற்றி

### சபையில் பிரதமர் ரணில்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தை வெற்றி அளித்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தையை பயனுள்ளதாக நிறைவு செய்வதற்கு முடிந்தமை மகிழ்ச்சி அளிப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரையொன்றை நிகழ்த்திய பிரதமர் 15

## பிரச்சினைகளுக்கான தீர்வையே மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்

### பாராளுமன்றில் சஜித் பிரேமதாஸ



(கொழும்பு)

நாட்டு மக்கள் வாழ்விற்காக போராடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், தமது பிரச்சினைகளுக்கு தீர்வொன்றை எதிர்பார்க்கின்றார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நாட்டின் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விநியோகம் தொடர்பில் தேசிய கொள்கை அவசியம்

## எரிசக்தி அமைச்சர் விஜேசேகர

(கொழும்பு)

எரிபொருள் விநியோகம் தொடர்பான தேசிய கொள்கையொன்றின் அவசியம் குறித்து எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர வலியுறுத்தியுள்ளார். நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அரச வாகனங்களுக்காக நாள் ஒன்றுக்கு 50 லட்சம் லீற்றர் எரிபொருள் பயன்படுத்தப்படுகிறது. இதனை பயன்படுத்தி 16 மில்லியன் மக்கள் தமது பயணங்களை மேற்கொள்கின்றனர்.

எனினும், தனியார் வாகனங்களுக்கு 58 லட்சம் லீற்றர் பயன்படுத்தப்படுகிறது. இந்த எரிபொருள் மூலம் 12 லட்சம் பேர் மாத்திரமே பயன்பெறுகின்றனர். எனவே, இந்த பயன்பாட்டில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று மின்சக்தி - எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இந்தநிலையில் அனைத்து கட்சிகளும் இணங்கினால், எரிபொருள் விநியோகம் தொடர்பில் தேசிய கொள்கை ஒன்றை ஏற்படுத்த முடியும் என்று அமைச்சர் குறிப்பிட்டார். (ம-7)

### எரிபொருள் நெருக்கடியால் ஒருவேளையே

# சைவ ஆலயங்களில் பூசை இடம்பெறுகின்றது

(யாழ்ப்பாணம்)

எரிபொருள் நெருக்கடியால் சைவ ஆலயங்களில் ஒருவேளையே நித்திய பூசை இடம்பெறுகின்றது என தெரிவிக்கப்படுகின்றது.

எரிபொர்ருள் கிடைக்காமையால் சிவாச்சர்ரியார்கள் 3 வேளைகளிலும் ஆலயங்களில் நித்திய பூசை செய்யாமல் ஒருவேளை மாத்திரமே பூசை செய்கின்றனர்.

எனவே சிவாச்சாரியார்களுக்கு எரிபொருள் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ம-7)

# மக்களின் பிரச்சினையை தீர்க்க ஜனாதிபதியால் புதிய குழு நியமனம்

வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழு மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் 7 குழு உறுப்பினர்களின் பங்கேற்புடன் இதனை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வாழ்க்கைச் செலவை நிலையாக பேணுவதற்குத் தேவையான கொள்கை மற்றும் நடைமுறை தீர்வுகள் அந்தக் குழுவின் மூலம் எடுக்கப்படவுள்ளன.

வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழுவில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ - தலைவர், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மீன்வளத் துறை அமைச்சர், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர், விவசாய அமைச்சர், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர், வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் போன்றவர்கள் உள்ளடங்குகின்றனர்.

இதற்கிடையில், வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழுவின் பணிகளுக்கு ஆதரவாக, வர்த் தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் தலைமையில் மற்றும் குறித்த அமைச்சர்களின் பங்கேற்புடன் உணவுப் பாதுகாப்புக் குழுவை நியமிப்பதற்கும் அமைச்சரவை ஒப்புதலளித்துள்ளது.(ம-7)

### உயர்தரம், சாதாரணதரம், புலமைப்பரிசில்

# பரீட்சை நடைபெறும் திகதி கல்வி அமைச்சால் அறிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்திற்கான கல்விப் பொதுத்தராதர உயர்தர, சாதாரணதர மற்றும் புலமைப்பரிசில் பரீட்சைகள் இடம்பெறும் திகதிகள் தொடர்பான அறிவிப்பை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் நவம்பர் 28 முதல் டிசம்பர் 23 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நடத்துவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

அத்துடன், இவ்வருடத்துக்கான புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி நடத்துவதற்கும் 2022 ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சையை 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே ஆகிய மாதங்களில் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7)

### பலாலி விமான நிலையம்

# மீள ஆரம்பிக்கப்படாமை குறித்து எனக்கு தெரியாது

## அமைச்சர் பந்துல

(கொழும்பு)

பலாலி விமான நிலையத்தின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டபோதிலும், அவை குறித்த தினத்தில் இடம்பெறாமை குறித்து தனக்குத் தெரியாது என அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

எனவே இது தொடர்பில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரான நிமல் சிறிபால டி சில்வாவிடம் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்துமாறு அறிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவரால் இது குறித்து கேட்கப்பட்டபோது, அமைச்சர் இவ்வாறு பதிலளித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


# மரண அறிவித்தல்

## திரு. சோமசுந்தரம் திருச்செல்வம்

( பாராளுமன்ற முன்னாள் அலுவலர் )



மலர்வு 1946.09.14

உதிர்வு 2022.06.22

யாழ்ப்பாணம், பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு பம்பலப்பிட்டி, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சோமசுந்தரம் திருச்செல்வம் அவர்கள் கடந்த 22.06.2022 (புதன்கிழமை) கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்ணாகத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஆறுமுகம் - பறுவதம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற யோகலட்சுமி அவர்களின் ஆருயிர்க் கணவனும் திருமகன் (கனடா), அருள்முகன் (இங்கிலாந்து), பூரணன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயமாலினி (கனடா), சர்மிளா (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமுகன், பூரணி (கனடா), சரண்யா, தியானலட்சுமி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் நாகபூசணி, காலஞ்சென்றவர்களான தெய்வேந்திரம், அன்னபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, தம்பிராசா, இராசதுரை, சிவஞானம், தவமணி மற்றும் பாலச்சந்திரா, காலஞ்சென்ற திருநாமம் மற்றும் கனகநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் பத்மாதேவி, அற்புதமேரி, செல்வம், காலஞ்சென்ற தியாகராசா மற்றும் சர்வேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக இன்று (06.07.2022) புதன்கிழமை காலை 10.30 மணியிலிருந்து 12.30 மணிவரையும் வைக்கப்பட்டு சமயக் கிரியைகள் Hamilton Harron Funeral Home, 5390 Fraser St. Vancouver இல் நடைபெறும் என்பதை அனைவருக்கும் தெரியப்படுத்துகின்றோம். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(12065)

தொடர்புகளுக்கு :-

திருமகன் (ராஜு - மகன்) +16048366593
அருள்முகன் (ரவி - மகன்) + 447985421170
பூரணன் (மகன்) + 12368384949
பாலச்சந்திரன் (மைத்துனர்) + 916479986750
கனகநாயகம் (மைத்துனர்) + 94777340383
சுதாமாறன் (ராதா - பெறாமகன்) + 94778996705

பண்ணாகம், சுழிபுரம்.

தகவல் :- தி. சுதாமாறன்


# உடுவிலில் எரிந்த நிலையில் பெண்ணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

உடுவில் பகுதியில் எரிந்த நிலையில் பெண் ஒருவரின் சடலம் நேற்றிரவு மீட்கப்பட்டுள்ளது.

இதில் உடுவில் தெற்கு சுன்னாகத்தினைச் சேர்ந்த பாஸ்கரன் கமலாம்பாள் என்ற 58 வயது பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

மரணத்திற்கான காரணம் இதுவரை தெரியாத நிலையில் சடலம் தொடர்பான மரண விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

குறித்த பெண் தனிமையில் வசித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# யாழ். போதனாவில் 6 மாத கர்ப்பவதி மரணம்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த 6 மாத கர்ப்பவதித் தாய் ஒருவர் நேற்று திடீர் சுகயீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

இதில் புதுத்தோட்டம் தெல்லிப்பளையைச் சேர்ந்த தயாகுமார் சிவரூபி எனும் 32 வயது கர்ப்பவதிப் பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணின் மரணத்துக்கு புற்றுநோயே காரணம் என மரண விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த பெண்ணின் குடும்பத்தார் நோயின் நிலைமை தொடர்பில் அறியாமலே இருந்துள்ளனர்.

மரண விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால சிங்கம் மேற்கொண்டார்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ம-7)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# “கோ ஹோம் கோட்டா” என பாராளுமன்றில் கொந்தளித்த எதிர்த்தரப்பு




(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வு நேற்று முன்தினம் ஆரம்பமாகியிருந்த நிலையில், நேற்று இரண்டாவது நாளாக அமர்வு இடம்பெற்றது.

நேற்றைய அமர்வில் பிரதமர் மற்றும் ஜனாதிபதி பங்குபற்றியிருந்தனர்.

இதன் போது பாராளுமன்றத்தில் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எதிராக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

பிரதமரின் உரை உள்ளிட்ட சபை அமர்வுகளை அவதானிப்பதற்காக முன்னறிவிப்பு இல்லாமல் கோட்டாபய பாராளுமன்றத்திற்கு சென்றிருந்தார்.

இந்நிலையில் அவருக்கு எதிராக கோ ஹோம் கோட்டா என கோஷமிட்டு எதிர்க்கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் சபை நடவடிக்கை 10 நிமிடங்களுக்கு ஒத்தி வைப்பதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன அறிவித்தார்.

இந்நிலையில் கோட்டாபய பாராளுமன்றை விட்டு வெளியேறிச் சென்றார். (நி)

## 3,489 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை இந்த வருட இறுதிக்குள் செலுத்த வேண்டும்

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இந்த வருட இறுதிக்குள் 3,489 மில்லியன் டொலர் கடனை செலுத்த வேண்டியிருக்கும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விசேட உரையாற்றிய போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், 2027 ஆம் ஆண்டு வரை மொத்தமாக 28 பில்லியன் டொலர் கடனை செலுத்த வேண்டும். இதுதான் உண்மை நிலை. இன்று நமது தேசிய கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 140 வீதமாகும்.

இன்று நமது வருமானம் மொத்த உள்நாட்டு வருமானத்தில் 7.3 வீதமாகும். 2026 ஆம் ஆண்டுக்குள் அதை 14 வீதமாக அதிகரிக்க எதிர்பார்க்கிறோம் என பிரதமர் தெரிவித்தார். (நி)

## விவசாயத்திற்கென பெற்ற கடனை தள்ளுபடி செய்ய அரசு முடிவு

(கொழும்பு)

நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள விவசாயிகள் பெற்றுக் கொண்ட கடனைத் தள்ளுபடி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. (நி)

## எரிவாயுக் கப்பல் நாட்டிற்கு வர தாமதமாகும்

(கொழும்பு)

3,700 மெற்றிக் தொன் எரிவாயு கொண்ட கப்பல் நாட்டை வந்தடைய மேலும் 3 நாட்கள் தாமதமாகும் என லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இன்று புதன்கிழமை வருகை தரும் என எதிர்பார்த்திருந்த நிலையிலேயே தாமதமாகும் என தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி எதிர்வரும் 9 ஆம் திகதி கப்பல் இலங்கைக்கு வரவுள்ளதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக எரிவாயு அடங்கிய மேலும் இரண்டு கப்பல்கள் எதிர்வரும் 11 மற்றும் 16 ஆம் திகதிகளில் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

லிட்ரோ நிறுவனம் உலக வங்கியுடன் 100,000 மெற்றிக் தொன் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளதுடன், அதற்கமைய, இந்த எரிவாயு கையிருப்புக்கள் இலங்கைக்கு வரவுள்ளன. (நி)

## பிரதமர் பதவியில் இருந்து விலகத் தயார்-ரணில்

(கொழும்பு)


தனது பதவியை இராஜினாமா செய்ய தயார் என ரணில் விக்ரமசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரதமர் பதவியை வழங்குங்கள் 6 மாதங்களில் நாட்டை வழமைக்கு கொண்டு வருவதாக மக்கள் விடுதலை முன்னணி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார். அவ்வாறு முடியுமென்றால் அந்த திட்டத்தை வர வேற்கின்றோம்.

அநுரகுமார திஸாநாயக்கவின் திட்டம் வெற்றியளிக்கும் என்றால் உடனடியாக பதவி விலக தயாராக உள்ளேன்.

எனவே எங்களை விடவும் சிறந்த வேலைத்திட்டம் உள்ள ஒருவரிடம் நாட்டை வழங்குவதற்கு நான் எதிர்ப்பு வெளியிட மாட்டேன். நான் பொய்யான தகவலை கூற மாட்டேன். அநுர குமாரவினால் 6 மாதங்களில் நாட்டை கட்டியெழுப்ப முடியுமென்றால் எனது பதவியை விட்டுக்கொடுத்து இராஜினாமா



செய்வதற்கு தயாராக உள்ளேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யுங்கள்

### குருதிக்கொடையாளர்களை அழைக்கும் யாழ்.போதனா மருத்துவமனை

(குப்பிழான்)

**நாட்டின் இரத்த வங்கிகளில் எல்லா வகையான குருதிக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பிராந்திய இரத்த வங்கியில் எல்லா வகையான குருதிகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.**

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பிராந்திய இரத்த வங்கியானது வட மாகாணத்திலுள்ள அனைத்து மருத்துவமனைகளுக்கும்தேவையான குருதியை விநியோகிக்கும் பாரிய பொறுப்பைக் கொண்டுள்ளது. தற்போது ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி காரணமாக நோயாளர்களுக்குத் தேவையான குருதியையும் குருதியின் கூறுகளையும் விநியோகிக்க முடியாத நிலைக்கு இரத்த வங்கிகள் தள்ளப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் தொற்றுக் காலத்தில் இவ்வாறான நிலை ஏற்பட்ட போது குருதிக் கொடையாளர்கள் அச்சமின்றி இரத்த வங்கிக்கும் இரத்ததான முகாமுக்கும் சமுகம் கொடுத்து இரத்ததானம் செய்து உயிர் காக்கும் உன்னத பணிக்குப் பாரிய பங்களிப்பை வழங்கியிருந்தார்கள். இதற்கு இரத்த வங்கிகள் சார்பாக நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.


அதே போன்று தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையால் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு அனைவரும் தங்கள் ஒத்துழைப்பை வழங்குமாறும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவு கேட்டுள்ளது.

அத்துடன் இரத்ததானம் செய்தல், இரத்ததான முகாம்களை ஏற்பாடு செய்தல் போன்றவற்றிற்கான விபரங்களுக்கு 077 210 5375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவினர் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (நி-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை கிரிக்கெட் பிரிவு III – 2022

# மானிப்பாய் பரீஸ் அணி முதலாவது தகுதி காண் போட்டியில் 6 விக்கெட்டுக்களால் வெற்றி



இலங்கை கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலின் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட தொடரின் முதலாவது தகுதி காண் போட்டி கடந்த சனிக்கிழமை விக்டோறியா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

அப்போட்டியில் மானிப்பாய் பரீஸ் அணி, சிறிகாமாட்சி அணியை 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற சிறி காமாட்சி அணி 29 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 12 ஓட்டங்களைப் பெற்றது.

நாகராஜன்-11, துவாரகன்-27, நிரூஜன்- 24, தர்ஸன்-20, சயந்தன்-26 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் மானிப்பாய் பரீஸ் அணி சார்பாக கனிஸ்ரன் -03, யார்ழினியான்-03, குகபிரசாத்-02, யதூஸன்-01 விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஸ் அணி 23.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 122 ஓட்டங்களை பெற்றனர். நிதர்ஸன்-34, குகபிர சாத் ஆட்டமிழக்காது 28, பாணுஸன் ஆட்டமிழக்காது 12 ஓட்டங்களைப் பெற்றனர்.


பந்துவீச்சில் சிறிகாமாட்சி சார்பாக துவாரகன்-03, தர்ஸன்-01 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 13 ஆவது வருடமாக நடத்தும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு (RATING) நிகழ்விற்கு மானிப்பாய் பரீஸ் அணி 7.82 புள்ளிகளையும் சிறிகாமாட்சி அணி 1.61 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2657

### நிலா

வெளிநாட்டு மேதை– தம்பி தற்சார்பு பொருளாதாரத்தை செய்யுங்கோ...
பெற்றோலுக்கு லைன்ல நிற்கிறதை விட்டிட்டு தேங்காய் எண்ணயெல்ல வாகனம் ஒட்ட கண்டு பிடியுங்கோ




### காந்தன்

திருமணம் முடிப்பவர்களில் எண்ணிக்கை 85 சத வீதமதாக குறைவடைந்தது. திருமண பதிவாளர்கள் சங்கம் தெரிவிப்பு



இனி எங்க அதெல்லாம் விடிஞ்சா பெற்றோல் மண்ணெண்ணெய் தேடவே நேரம் சரியா இருக்கு

### அபி

மச்சான் இப்போ தான் Tution முடிச்சு உன்ட ஆள் போகுது Quick ஆ Bike எடுத்து வந்து Mass காட்டு




Bike la பெற்றோல் இல்லடா





### கனுஷாந்

பெற்றோல் பதுக்கி வாழ்வாரே வாழ்வர் மற்றோர் பஸ்ஸில் நசுங்கி சாவார்.



### தனுசியா



ஏனைய நாடுகளில் தொழில்நுட்ப விருத்திக்கு ஏற்ப பாடசாலைகள் நடத்தப்படுகின்றன. இலங்கையில பெற்றோல் கப்பல் வருவதற்கு ஏற்ப பாடசாலைகள் நடத்தப்படுகின்றன.

### பிரதாப்

தகுதி பார்த்து யாரிடமும் பழகாதே.
'உன் இறுதி சடங்கில்'
தகுதி உள்ளவன் கை கட்டி நிற்பான்.
தகுதி இல்லாதவன் உன்னை சுமந்து செல்வான்.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று வேளையும் உணவை

## பெறமுடியாத நிலையில் இலங்கை மக்கள்

## சர்வதேச ஊடகம் செய்தி வெளியீடு

(கொழும்பு)

இலங்கையில் வேகமாக அதிகரித்து வரும் பணவீக்கம் காரணமாக இலங்கை மக்கள் மூன்று வேளை உணவை பெற்றுக்கொள்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பலரது வாழ்வாதாரமும் ஆபத்துக்குள்ளாகி இருக்கின்றது. உணவுகளின் விலை அதிகரிப்பு காரணமாக ஒரு குடும்பத்தின் உறுப்பினர்கள் உணவு சாப்பிடும் வேளைகளை குறைக்க நேரிட்டுள்ளது.

இலங்கையில் கடந்த ஜூன் மாதம் பணவீக்கம் 54.6 வீதமாக பதிவாகியது. போக்குவரத்து கட்டணங்களும் 128 வீதமாக அதிகரித்துள்ளன. உணவு பணவீக்கம் 80.1 வீதமாக பதிவாகியுள்ளதாக புள்ளிவிபரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

உலக சுகாதார அமைப்பு பரிந்துரைக்கும் போஷாக்கான ஒரு வேளை உணவை சாப்பிட இலங்கை குடும்பம் ஒன்று மாதம் 93 ஆயிரத்து 675 ரூபாவில் இருந்து ஒரு இலட்சத்து 48 ஆயிரத்து 868 ரூபா வரை சம்பாதிக்க வேண்டும் என உணவு பணவீக்கத்தை அளவிடும் நிபுணரான பொருளாதார நிபுணர் ரேஹான தௌபிக் தெரிவித்துள்ளார்.

எனினும், இலங்கையில் நடுத்தர குடும்பம் ஒன்றின் மாதாந்த வருமானம் 76 ஆயிரத்து 414 ரூபாவாக இருக்கின்றது. இலங்கை சனத்தொகையில் 20 வீதமாக இருக்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் சராசரி மாத வருமானம் 17 ஆயிரத்து 572 ரூபா என புள்ளி விபரங்கள் காட்டுக்கின்றன.

இலங்கையின் தற்போதைய நெருக்கடி காரணமாக மக்கள் படும் கஷ்டங்களை மேலும் உக்கிரமாக்கும் வகையில் மரக்கறிகளின் விலைகளும் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளன.

கடந்த ஆண்டு 145 ரூபாவாக இருந்த ஒரு கிலோ கிராம் அரிசியின் விலை தற்போது 230 ரூபாவாக அதிகரித்துள்ளது எனவும் அந்த செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி)

## எரிபொருளை சீரமைக்க கோரி அரசாங்க அதிபருக்கு கடிதம்

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் எரிபொருளை பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட நாட்களாக வீதிகளில் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றமை தொடர்பில் வவுனியா மாவட்ட பொது அமைப்புகள் ஒன்றிணைந்து மக்கள் அமைப்பு என்ற ரீதியில் அரசாங்க அதிபரிடம் கடிதமொன்றினை நேற்று கையளித்தனர்.

வவுனியா மாவட்டத்தில் விவசாயிகள், முச்சக்கரவண்டி சாரதிகள், பேருந்து உரிமையாளர்கள், வர்த்தக சங்கத்தினர், ஊடகவியலாளர்கள் ஆகியோரை உள்ளடக்கி கையளிக்கப்பட்ட குறிப்பிட்ட கடிதத்தில் வவுனியா மாவட்டத்தில் பொதுமக்கள் உட்பட அனைத்து துறையினருக்கும் எரிபொருளை வழங்க சீரான நடைமுறையினை மேற்கொள்ள வலியுறுத்தியுள்ளனர்.

இதன் பிரகாரம் இன்று இவ்விடயம் தொடர்பாக அரசாங்க அதிபர் தலைமையில் விசேட கூட்டமொன்றுக்கு ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (4-299)

## மண்டைதீவு-பூமாவடி-பூம்புகார் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு-பூமாவடி-பூம்புகார் அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய மாபெரும் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 11 மணிக்கு அபிஷேகம் நடைபெற்று மாலை 6 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகும். (4)



திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் சைவப் பெருவள்ளலாளர் சேர்.பொன்.இராமநாதனால் உருவாக்கப்பட்ட ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரப்பெருமானின் மஹாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 6 மணி முதல் காலை 7 மணிவரையான சுபமுகூர்த்த வேளையில் இடம்பெற உள்ளது. மஹா கும்பாபிஷேகத்திற்கான எண்ணெய்க்காப்புச் சாத்தும் வைபவம் நேற்று செவ்வாய்க் கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெற்றது.

(படங்கள்-சிவசாந்தன், ரவிசாந்)



யாழ்.மாவட்டத் திரிசாரணர் குழாம் மற்றும் நல்லூர் லயன்ஸ் கழகம் இணைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவ இரத்த வங்கிப் பிரிவின் அனுசரணையில் நடத்திய இரத்ததான முகாம் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை சுண்டுக்குளியில் அமைந்துள்ள கிறீன் பீல்ட் சனசமூக நிலைய மண்டபத்தில் யாழ்.மாவட்டத் திரிசாரணர் குழாமின் தலைவர் என்.மஞ்சுதன் தலைமையில் இடம்பெற்றது.

(படம்-ரவிசாந்)

# இராசிபலன்

06.07.2022
ஆனி 22, புதன்கிழமை
சப்தமி பிற்பகல் 3.41 மணிவரை

உத்தரம் முற்பகல் 8.37 மணிவரை
சுப நேரம் -4.28-5.58 மணிவரை
இராகு காலம் -11.58-1.28 மணிவரை

ஆனி உத்தர தரிசனம்
சந்திராஷ்டமம்-சதயம்

வளவன்




நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்,கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.




நேற்றைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், பாசத்தோடு பழகியவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.




ஒரு சில வேலைகளுக்காக சற்று அலைச்சல்கள் ஏற்படலாம், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.




ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு.




அரசு வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டால் நிம்மதி காண வேண்டிய நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பிள்ளைகள் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.




குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும் பேச்சில் இனிமை தென்படும், மதிப்பும் மரியாதையும் உயரும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் மேலோங்கும் நாள், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பணத் தேவைகள் பூர்த்தியாகும்.




உறவினர் நண்பர்களிடம் பேசும் போது கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.




தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், தொழில் வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும்.




கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு, குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது.




வரம் தரும் செய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.




வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத் தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினம் கூர்மையான கத்தி போன்றது.

# தனியார் பேருந்து உரிமையாளர்கள், முச்சக்கரவண்டி சாரதிகள்

# எரிபொருள் கோரி மன்னாரில் போராட்டம்

(மன்னார்)

மன்னாரில் நேற்று காலை முதல் மன்னார் தனியார் பேருந்து சங்கத்தினர் மற்றும் முச்சக்கரவண்டி சாரதிகள் எரிபொருள் கோரி போராட்டத்தில் ஈடுபட்டனர்.



அரசபோக்குவரத்து சேவையை முன்னெடுக்க முடியாத வகையில் தனியார் பேருந்து உரிமையாளர்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் போக்குவரத்தை மேற்கொள்ள காத்திருந்த மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

தனியார் பேருந்து சங்க உரிமையாளர்கள் மன்னார் டிப்போ அதிகாரிகளிடம் டீசல் கோரிய போதும் வழங்கப்படவில்லை. இந்த நிலையில் நேற்று காலை முதல் தனியார் பேருந்துகள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதோடு, அரச போக்குவரத்து சேவையை மேற்கொள்ள முடியாத வகையில் தனியார் பேருந்துகளினால் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டதோடு தமக்கான எரிபொருளையும் வழங்க கோரிக்கை விடுத்தனர்.

இதனால் போக்குவரத்துச் சேவைகள் சிறிது நேரம் முழுமையாக பாதிக்கப்பட்டதோடு, மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி.ஏ.ஸ்ரான்லி டிமேல் தலைமையில் அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சங்க பிரதிநிதிகளுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் பிரதேச செயலாளர், இராணுவம்,பொலிஸ் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது இலங்கை போக்குவரத்து சபையின் எண்ணெய் குதங்களில் இருந்து தனியார் பேருந்து சேவை பேருந்துகளுக்கு டீசல் வழங்குவது என்ற அரச நிலைப்பாட்டிற்கு அமைய மன்னார் சாலைக்கு 6600 லீற்றர் டீசல் வருமாக இருந்தால் அவற்றில் 2500 லீற்றர் டீசலையும் 13,200 லீற்றர் டீசல் வருமாக இருந்தால் 5000 லீற்றர் டீசல் தனியார் பேருந்து சேவை பேருந்துகளுக்கு வழங்குவது என குறித்த கலந்துரையாடலின் போது இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் தனியார் பேருந்து சங்க உரிமையாளர்கள் முன்னெடுத்த பகிஷ்கரிப்பு போராட்டம் கைவிடப்பட்டது. (4-285)

## கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-டச் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய மணிக்கோபுர கும்பாபிஷேகப் பெருவிழா வைபவம் 9 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விநாயகர் வழிபாடு, சாந்தி மற்றும் விசேட பூஜை வழிபாடு ஆகியன இடம்பெறவுள்ளன. சிவஸ்ரீ கெ.பிரதீபகாந்தக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகப் பெருவிழா இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (4-30)

• • • • • • • • • • • • • • •

(சாவகச்சேரி)

தென்மராட்சி மிருசுவில்-கெற்பேலி கிழக்கு தரவையம்பதி ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் ஆலய மஹாகோபுரக் கும்பாபிஷேகப் பெருவிழாவும் 30 ஆவது வருட மஹோற்சவ கொடியேற்றத் திருவிழாவும் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து 21 ஆம் திகதி வியாழக்கிழமை சப்பரத் திருவிழாவும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் 23 ஆம் திகதி சனிக்கிழமை கடல் தீர்த்தமும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பட்டுத் தீர்த்தமும் இடம்பெறவுள்ளது. (4-30)



கொக்குவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீ சொர்ண சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 3 ஆம் நாள் திருவிழாவின் இரட்டைக்கொம்பு பூந்தண்டிகை உற்சவம் நேற்று முன்தினம் சிறப்பாக இடம்பெற்றது.

## வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 8 பேர் தமிழகத்தில் தஞ்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வல்வெட்டித் துறை பகுதியைச் சேர்ந்த 8 பேர் அகதிகளாக தமிழ் நாட்டில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

வல்வெட்டித்துறையில் இருந்து படகு மூலம் தமிழகம் தனுஷ் கோடி பகுதிக்கு சென்ற வேளை இராமேஸ்வரம் கடலோர பாதுகாப்பு படையினர் இவர்களை மீட்டு பொலிஸ் நிலையம் கொண்டு சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்களை மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்க ஏற்பாடு செய்யப்படும் என கடலோர பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

இலங்கையில் இருந்து கடந்த மார்ச் மாதம் முதல் நேற்று வரையில் 103 பேர் தமிழகத்திற்கு அகதிகளாக சென்றுள்ளனர். (4-33-18-60)

## 5 இந்திய மீனவர்களும் 19 வரை விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 5 தமிழக மீனவர்களையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம் பகுதியைச் சேர்ந்த ஐந்து மீனவர்களும் விசைப்படகொன்றில் கோடியாக்கரை பகுதியில் இருந்து மீன்பிடிக்க புறப்பட்டவர்கள் எல்லை தாண்டி யாழ்ப்பாணம் காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டு இருந்த வேளை கடற்படையினரால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை கடற்றொழில் நீரியல் வளத்துறையினர் ஊடாக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதை தொடர்ந்து அவர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (4-33-60)

## தங்கம்மா அப்பாக்குட்டியின் குருபூஜை தினம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான முன்னாள் பெருந்தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி. கலாநிதி.தங்கம்மா அப்பாக்குட்டியின் 15 ஆம் ஆண்டு குருபூஜை வைபவம் எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் கலாநிதி. ஆறு.திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4)



யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய 16 ஆம் திருவிழாவான நேற்று முன்தினம் திங்கட்கிழமை புஷ்பரத திருவிழா இடம்பெற்றது.

மாலை இடம்பெற்ற வசந்த மண்டப பூஜையை தொடர்ந்து பிள்ளையார், முருகன் வள்ளி தெய்வானை ஆகியோருடன் வீரமாகாளி அம்மன் புஷ்பரதத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருட்காட்சி அளித்தார். (படம்:-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்ற அறுவை சிகிச்சை உபகரணங்களை வழங்குங்கள்

## நன்கொடையாளர்களுக்கு அழைப்பு

(கொழும்பு)

**அனைத்து நலன்விரும்பிகள் மற்றும் தன்னார்வலர்கள் முன்வந்து அறுவை சிகிச்சை உபகரணங்களை நன்கொடையாக வழங்குமாறு தேசிய இரத்த மாற்று சேவை வேண்டுகோள் விடுத்துள்ளது.**

சுகாதார அமைச்சின் ஊடாக, இது தொடர்பான வேண்டுகோள் ஒன்றை தேசிய இரத்த மாற்று சேவைப்பணிப்பாளர்விடுத்துள்ளார்.

அனைத்து நலன்விரும்பிகள் மற்றும் தன்னார்வலர்கள் இந்த பணியை முன்னெடுத்துச் செல்ல உதவுமாறு அவர் கோரியுள்ளார்.

அதன்படி, தன்னார்வலர்கள் தங்களால் இயன்ற அறுவை சிகிச்சை உபகரணங்கள் மற்றும் பொருட்களை விரைந்து நன்கொடையாக வழங்குமாறும் இந்த அறுவை சிகிச்சை பொருட்களை வழங்குவதன் மூலம் ஆயிரக்கணக்கான உயிர்களைக் காப்பாற்ற முடியும்என்றும்தேசிய இரத்த மாற்று சேவைப் பணிப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# மீண்டும் அரசியலில் இறங்குவேன்

## மகிந்த அதிரடி



(கொழும்பு)

எதற்கும் பயப்பட வேண்டாம், நான் மீண்டும் அரசியல் நடவடிக்கைகளைத் தொடங்குவேன் என முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆளும்கட்சி உறுப்பினர்களின் கூட்டத்தில் கலந்து கொண்ட போது இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் பதவியில் இருந்து விலகியதன் பின்னர், ஆளும் கட்சி உறுப்பினர்களின் குழுக் கூட்டத்தில் மகிந்த ராஜபக்ஷ பங்கேற்பது இதுவே முதல் முறையாகும்.

இதன் போது கருத்து வெளியிட்ட மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியல் பணிகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார். (நி)

# சுற்றுலாப் பயணிகளின் வருகையில் சற்று உயர்வு

(கொழும்பு)

ஜூன் மாதத்தில் மட்டும் 32,865 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர். இது முன்னைய மாதங்களை விட சற்று அதிகம் என இலங்கை சுற்றுலாத்துறை அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்தியாவிலிருந்து 6550 சுற்றுலாப் பயணிகளும் பிரிட்டனிலிருந்து 3199 சுற்றுலாப்பயணிகளும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர். அவுஸ்திரேலிய இலங்கை கிரிக்கெட் தொடர் காரணமாக 2448 சுற்றுலாப்பயணிகள் இலங்கை வந்துள்ளனர். (நி)

# நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் நிலக்கரிக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

நுரைச்சோலை அனல்மின் நிலையத்தில் நிலக்கரி கையிருப்பு முடியும் தறுவாயில் காணப்படுவதாக, மின் நிலைய உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிலக்கரி கையிருப்பு இன்னும் 80 நாட்களுக்கு மட்டுமே எஞ்சியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அனல்மின் நிலையத்தின் மூன்று மின் ஆலைகளை இயக்குவதன் மூலம் 900 மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது.

இதில் 810 மெகாவோட் மின்சாரம் தேசிய தேவைகளுக்காக பயன்படுத்தப்படுவதுடன் 90 மெகாவோட் மின்சாரம் மின் உற்பத்தி நிலையத்தின் தேவைகளுக்காக பன்படுத்தப்படுகின்றது.

இயந்திரங்கள் பழுதுபார்க்கப்படுவதனால் தேசிய ரீதியில் வழங்கப்படும் மின்சாரத்தின் அளவு 270 மெகாவோட்களினால் தற்பொழுது குறைவடைந்துள்ளது.

ஒரு இயந்திரம் பழுதுபார்க்கப்பட்டாலும் மற்றுமொரு இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்கு 75 நாட்கள் அவகாசம் தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதமளவில் முழு வீச்சில் இயந்திரங்கள் இயங்கும். இதன்போது கூடுதல் அளவில் நிலக்கரி தேவைப்படும் எனவும் அவற்றை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது. (நி)

# ஜனாதிபதியை பாதுகாப்பாக அமெரிக்காவுக்கு அனுப்ப தயார்

(கொழும்பு)

முழு நாடும் தற்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

இதனால், ஜனாதிபதிக்கு தற்போது மக்களின் ஆதரவு இல்லை. இந்த நிலையில், சர்வகட்சி அரசாங்கம் ஒன்றின் கீழ் நாட்டில் காணப்படும் உக்கிரமான நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வந்து, தேர்தலை நடத்த வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புடன் அமெரிக்காவுக்கு செல்ல சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கவும் தயார். ஜனாதிபதியை பரிதாபகரமான நிலைமைக்குள் தள்ள எதிர்பார்க்கவில்லை.

ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு வழங்க வேண்டிய சந்தர்ப்பம் தற்போது ஏற்பட்டுள்ளது என [illegible] தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 1<br>கி.பா: 9 சூரி 9 செவ் 3 இல்<br>உயரம்:5' 9"<br>தகைமை/தொழில்:ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10124 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 37 ½ சூரி 2 செவ் 12 இல்<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்:பட்டதாரி (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: பொறியியலாளர் அல்லது கணக்காளர் வெளிநாடாயின் அவுஸ்திரேலியா<br>தொ.இ:G/10493 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 2<br>கி.பா: 21 ½ சூரி 11 செவ் 1 இல்<br>உயரம்:5' 7"<br>தகைமை/தொழில்: A/L கணித பிரிவு வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10129 | பிறப்பு:1992 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா:53 சூரி 1 செவ் 11 இல்<br>உயரம்:5'<br>தகைமை/தொழில்:BSc IT (IIS) Software Engineer<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி அரச உத்தியோகம்<br>தொ.இ: G/10504 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா:41 ¾ சூரி 7 செவ் 4 இல்<br>உயரம்: 5' 7"<br>தகைமை/தொழில்: A/Lகாட்வெயார் கடை<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10132 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா:45 ½ சூரி 2 செவ் 3 இல்<br>தகைமை/தொழில்:B.Tech (India) Lab Technician (Semi Gov)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/10507 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம் : ரோகிணி 1<br>கி.பா:37 ½ சூரி , செவ் 4 இல்<br>உயரம் :5' 8"<br>தகைமை/தொழில்: BSc, MSc Software Engineer<br>எதிர்பார்ப்பு:உயர்கல்வி. உயர்பதவி<br>தொ.இ: B/10135 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>கி.பா: சூரி 7 செவ் 5 இல்<br>உயரம் : 160cm<br>தகைமை/தொழில்:BA, இறுதியாண்டு மாணவி<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி நிரந்தர வேலை<br>தொ.இ:G/10531 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 89

# திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்



ஜேர்மனியில் கர்ப்பிணி பெண்மணி ஒருவர் தன்னுடைய வயிற்றில் இருந்த சிசு கொஞ்சமும் நகராமல் இருப்பதை இரவில் திடீரென்று உணர்ந்தார். பதறிப்போன அவரும் அவருடைய கணவரும் உடனே மருத்துவரை அணுகினர். மருத்துவர் பரிசோதித்துவிட்டு காலையில் ஸ்கான் செய்து பார்க்கலாம் என்றும், சிசு கர்ப்பப்பைக்குள் வட்டமடிக்காமல் இருந்தால் அது உயிருடன் இல்லை என்பதாகவே தனக்கு படுவதாக கணவரிடம் மட்டும் இரகசியமாக சொல்லிவிட்டு மனதை திடப்படுத்திக்கொள்ள சொல்லிவிட்டார்.

குழப்பத்துடன் வீடு திரும்பிய கணவன், மனைவிக்கு விடயத்தை சொல்லாமல் கொஞ்சம் அவளுடைய மனநிலையை மாற்ற டேப் ரிக்கார்டரில் ஒரு பாடலை போட்டுவிட்டார். தன் வேதனையை வெளிக்காட்டிக்கொள்ளாமல் மனைவியின் அருகில் கண் மூடி அமர்ந்திருந்தார். திடீரென்று தன் மனைவி தன் தோளை தொட்டு உலுக்கவும் கண்ணை திறந்தார். மனைவி ஆனந்த கண்ணீரோடு சிசு கர்ப்பப்பையின் உள்ளே தற்போது நகர்வதாக சொல்லவும் உடனே மறுபடியும் மருத்துவமனைக்கு இருவரும் பயணித்தனர்.

மீண்டும் பரிசோதித்த மருத்துவருக்கு பயங்கர ஆச்சரியம். அவரும் சிசு நகர்வதை உறுதி செய்தார். எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் விசாரித்தார். குறிப்பிட்ட பாடலை கேட்டவுடன்தான் குழந்தை நகர்ந்ததை உணர்ந்த அவர் அந்த இசையமைப்பாளரை தெய்வம் என்று வாயார புகழ்ந்தார்.

குழந்தை நல்லபடியாக சிறிது நாட்கள் கழித்து பிறந்தது. அந்த தம்பதியினர் நேராக அந்த இசையமைப்பாளர் வீட்டுக்கு வந்து அவர் காலில் அந்த குழந்தையை போட்டு, அவர்களும் அவர் காலில் விழுந்து ஆசி வாங்கி சென்றனர்.....

அந்த பாடல் திருவாசகம் .....!

அந்த இசையமைப்பாளர் இளையராஜா.

**அன்பு வாசகர்களே!**
**முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.**

# உக்ரைனை கட்டியெழுப்ப 750 பில்லியன் டொலர் செலவாகும்

## ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவிப்பு

(கீவ்)

போரினால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு 750 பில்லியன் டொலர் செலவாகும் என உக்ரைன் அறிவித்துள்ளது.

இது ஜனநாயக உலகின் பகிரப்பட்ட கடமை என உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தில் இடம்பெற்ற மாநாடு ஒன்றில் கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ரஷ்யாவினாலேயே இந்த பாரிய அழிவு ஏற்படுத்தப்பட்டதாகவும் இதற்கு ரஷ்யா [illegible] டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

# 70 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு இத்தாலியில் கடுமையான வறட்சி


(வத்திக்கான்)

கடந்த 70 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடு மையான வறட்சி நிலவி வரும் நிலையில், போ ஆற்றை சுற்றியுள்ள ஐந்து வடக்கு பகுதிகளில் இத்தாலி அவசரகால நிலையை அறிவித்துள்ளது.

எமிலியா-ரோமக்னா, ஃப்ரியூலி வெனிசியா கியு லியா, லோம்பார்டி, பீட்மா ண்ட் மற்றும் வெனெட்டோ ஆகிய இடங்களில் தண் ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு ள்ளது.

இந்த தண்ணீர் பற்றாக் குறையை சமாளிக்க அவ சரகால நிதியாக 36.5 மில் லியன் யூரோக்கள் வழங் கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. (நி)

# உலகின் மிகப்பெரிய நீர் அல்லி இனம் கண்டுபிடிப்பு



(லண்டன்)

உலகின் மிகப்பெரிய நீர் அல்லி இனம் புகழ் பெற்ற லண்டனில் உள்ள கிவ் தாவரவியல் பூங்காவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த பெரிய நீர்வாழ் தாவரத்தின் மாதிரிகள் கியூவில் உள்ள தேசிய மூலிகை செடி ஆராய்ச்சி நிறுவனத்தில் 177 ஆண்டுகளாகவும், பொலிவியாவின் தேசிய மூலிகை செடி ஆராய்ச்சி நிறுவனத்தில் 34 ஆண்டுகளாகவும் உள்ளன. ஆனால், இது பொதுவாக மற்ற இரண்டு இனங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.

3 மீற்றர் (10 அடி) அகலத்திற்கு மேல் வளரும் இலைகளுடன் இது உலகின் மிகப்பெரிய நீர் அல்லி என்ற சாதனையையும் கொண்டுள்ளது.

இந்த இனம் விக்டோரியா பொலிவியானா என்று அழைக்கப்படுகிறது. பொலிவியாவின் பெயரால் பெயரிடப்பட்டது, இது அமேசன் நதி அமைப்பின் ஒரு பகுதியில் ஒரு நீர்ப் படுகையில் வளரும். உலகிலுள்ள மூன்று அல்லி இனங்கள் விக்டோரியா அமேசானிகா, க்ரூசியானா மற்றும் பொலிவியானா ஆகிய மூன்று இனங்கள் விக்டோரியா மகாராணியின் பெயரால் அழைக்கப்படுகின்றன. (நி)

# இந்தோனேசியாவில் படகு கவிழ்ந்து விபத்து

## 15 மீனவர்கள் மாயம்

(இந்தோனேசியா)

அராபுரா கடலில் படகு மூழ்கியதில் காணாமல்போன 15 மீனவர்களை மீட்புப் படையினர் தொடர்ந்து தேடி வருவதாக இந்தோனேசிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமையன்று குறித்த படகு 25 மீனவர்களுடன் பயணம் செய்து கொண்டிருந்த போது மோசமான வானிலையின் காரணமாக பெரும் அலைகளால் தாக்கப்பட்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்நிலையில், தகவல் கிடைத்ததும் மீட்புக்குழுவினால் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன.

பத்து பேர் மீட்கப்பட்டுள்ளதோடு, 15 பேர் காணாமல் போயுள்ளனர். தேடுதல் பணியில் இந்தோனேசிய விமானப்படையின் விமானம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது (நி)

# ரஷ்யா மீது பின் விளைவுகளை

## ரஷ்யாவுக்கான

(ஜெனிவா)

ரஷ்யா மீது கைவைத்தால், பின் விளைவுகளை சந்திக்கத்தான் வேண்டும் என்று கூறி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார் ரஷ்யாவுக்கான முன்னாள் சுவிஸ் தூதர்.

ரஷ்யா உக்ரைனை ஊடுருவியதை பாரபட்சமில்லாமல் விமர்சிக்கும் சுவிஸ் தூதர் உக்ரைன் மற்றும் மேற்கத்திய நாடுகள் மீதும் தவறு இருக்கிறது என்கிறார். ரஷ்யாவை காயப்படுத்த விரும்பினால், நீங்கள் அதற்கான பின் விளைவுகளை சந்திக்கவும் தயாராக இருக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

புடினுக்குப் போகும் பணத்தை நீங்கள் தடுத்து நிறுத்த விரும்பினால், உங்களுக்கு முழுமையாக எண்ணெய் மற்றும் எரிவாயு வழங்கல்



நிறு
நாட்
கைக
ரமே
உ
நடை
டத்தி
முடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



...க்கு
...ட்சி

...ம்பார்டி, ...ளட்டோ ...ணீர்
...றையை ...க 36.5 ...கப்படும் (நி)

...ய
...ப்பு



...ன் இது ...லி என்ற ...ாது. ...பொலிவி ...டுகிறது. ...பெயரி ...அமைப் ...கையில் ...அல்லி ...சானிகா, ...யானா ...டோரியா ...ழைக்க (நி)


## அமெரிக்காவின் சுதந்திர தின அணிவகுப்பில்

# துப்பாக்கிப் பிரயோகம்

## 6 பேர் பலி, 30 பேர் காயம்

**(வோஷிங்டன்)**

**அமெரிக்காவில் சுதந்திர தின அணிவகுப்பில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் உயிரிழந்தனர். 30 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.**





அமெரிக்காவின் சுதந்திர தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. சுதந்திர தினத்தையொட்டி அந்நாட்டில் பல்வேறு மாகாணங்களில் சுதந்திர தின அணிவகுப்புகள், கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இல்லினாய்ஸ் மாகாணத்தின் சிக்காக்கோ நகரின் புறநகர்ப் பகுதியில் உள்ள ஹைலண்ட் பூங்காவில் சுதந்திர தின அணிவகுப்பு காலையில் தொடங்கியது.

அப்போது, சுதந்திர தின அணிவகுப்பில் கலந்து கொண்டிருந்த ஒருவர் கூட்டத்தினரை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டார். இந்த துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் உயிரிழந்தனர். மேலும், 30 பேர் படுகாயமடைந்தனர்.


இந்த துப்பாக்கிச்சூடு குறித்து தகவலறிந்த பொலிஸார், மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று படுகாயம் அடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டை நடத்திய கொலையாளியான 22 வயதான இளைஞன் ஒரு மணி நேரத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க மக்களின் இயல்பு வாழ்க்கையை சிதைக்கும் வகையில் அங்கு இடம்பெற்றுவரும் தொடர் துப்பாக்கி வன்முறைகளில் மிகச் சமீபத்திய சம்பவமாக இது பதிவாகி யுள்ளது.

பாடசாலைகள், தேவாலயங்கள், வணிக வளாகங்களில் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் பலர் கொல்லப்பட்ட நிலையில் சுதந்திர தின அணிவகுப்பில் துப்பாக்கி வன்முறை இடம்பெற்றுள்ளது.(நி)

## ...மீது கை வைத்தால்
### ...களை சந்திக்கத்தான் வேண்டும்
### ...கான முன்னாள் சுவிஸ் தூதர்



நிறுத்தப்படும். தடைகள் ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கைகளை மாற்றியதாக சரித்திரமே கிடையாது.

உக்ரைனில் 2014 இல் நடைபெற்ற மக்கள் போராட்டத்தின் போது உக்ரைன் எடுத்த முடிவு. Minsk ஒப்பந்தத்தை மீறியது என உக்ரைன் தரப்பிலும் தவறுகள் உள்ளன என்று கூறும் அவர் ஆனாலும், ஒரு நாட்டின் மீது தாக்குதல் நடத்தியதை இவற்றைக் கொண்டெல்லாம் நியாயப் படுத்த முடியாது எனவும் தெரிவித்தார். (நி)

## மெக்காவிலும் இனி தமிழ் ஒலிக்கும்

(சவுதி அரேபியா)

சவுதி அரேபியாவில் உள்ள மெக்காவில் இனி தமிழிலும் அரஃபா உரை வாசிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மெக்காவின் தலைவர் அப்துல்ரஹ்மான் அல்-சுதைஸ் கூறும்போது, "மதினா, மெக்காவின் வளர்ச்சிக்கும், சேவைக்கும் சவுதி அரசு அனைத்து ஆதரவையும் வழங்கி வருகிறது. அரஃபா உரை மொழிபெயர்ப்பு இந்த வருடம் ஐந்தாவது வருடத்தில் நுழைந்துள்ள நிலையில், இத்திட்டம் 14 மொழிகளை உள்ளடக்கியதாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.



அதன்படி ஆங்கிலம், பிரெஞ்சு, மலாய், உருது, பெர்சியன், சீன மொழி, துருக்கிய மொழி, ஸ்பெனிஷ் போன்ற மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யப் [illegible] ள்ளது. இந்த நிலையில் இதில் தமிழ், வங்காளம் போன்ற மொழிகளும் இணைந்துள்ளன.

அரஃபா உரை மொழி பெயர்ப்பு என்பது உலகத்திற்கான ஒரு பரந்த திட்டமாகும், குறிப்பாக புனிதத் தலங்களுக்கு வருபவர்கள், அரபு அல்லாத மொழி பேசுபவர்கள் தங்கள் தாய்மொழியில் கேட்க உதவுகிறது. இத்திட்டம் சுமார் 20 கோடி பேருக்கு பயனளிக்கும்.

யாத்ரீகர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு சேவை செய்ய நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, இஸ்லாத்தின் நிதானம் மற்றும் சகிப்புத்தன்மை பற்றிய செய்தியை உலகிற்கு தெரிவிக்க தலைமை ஆர்வமாக உள்ளது. அதன் பொருட்டே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

யாத்ரீகர்களை பராமரிப்பதன் முக்கியத்துவத்தை மன்னர் சல்மான் எப்போதும் வலியுறுத்துவார், மேலும் இந்த பணியை தொடர்வதில் சவுதி அரேபியா எப்போதும் பெருமிதம் கொள்ளும்" என அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சப்த கன்னியர் ஆலய தீர்த்தமெடுக்க செல்லும்

# வீதியை மறித்து இராணுவம் அடாவடி

(முல்லைத்தீவு )

**முல்லைத்தீவு வட்டுவாகல் சப்த கன்னியர் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு தீர்த்தமெடுக்க செல்லும் வீதியை மறித்து இராணுவம் நேற்று முன்தினம் அடாவடியில் ஈடுபட்டது.**

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை ஆலயத்திலிருந்து தீர்த்தம் எடுப்பதற்காக முல்லைதீவு பெருங் கடலை நோக்கி அடியவர்கள் சென்றுள்ளனர்.

இதன்போது தீர்த்தக்கரை செல்லும் வீதியை இராணுவம் மறித்து பாரிய இராணுவ முகாம் ஒன்றை அமைத்துள்ளனர். இதுவ்ரை காலமும் தீர்த்தமெடுப்பதற்கு அனுமதி வழங்கிய இராணுவத்தினர் இம்முறை தீர்த்தம் எடுப்பதை தடை செய்துள்ளனர்.

குறித்த வீதி ஊடாக இராணுவத்தினர் தீர்த்தம் எடுக்க செல்ல விடாததன் காரணமாக குறித்த இடத்தில் குழப்ப நிலை ஏற்பட்டது.

இதன்போது அங்கு சென்றவர்கள் பல்வேறு வகையிலும் அவர்களிடம் கோரிய போதும் அவர்கள் எந்த விதத்திலும் அனுமதிக்காத நிலையில் அங்கு பதற்றம் நிலவியது.

அதையடுத்து மாற்று பாதை ஒன்றினூடாக தீர்த்தமெடுக்கும் அணியினர் சென்ற அதே வேளையில் அந்த இடத்தில் ஏற்கனவே ஒன்றுகூடி இருந்த ஏனைய மக்களும் இராணுவத்தினா் ஆலய கடமைகளுக்கு ஒத்துழைக்காத காரணத்தினால் ஆல்யக் காணியில் இருந்து வெளியேறுமாறு மக்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்கள் வீதியில் இறங்கி போராட முற்பட்ட வேளையிலே சுமார் 50 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஆயுதம் தாங்கிய நிலையில் குறிப்பிட்ட பகுதிக்கு கொண்டுவரப்பட்டு குறிப்பிட்ட இடத்திலே சில மணி நேரமாக பதற்ற நிலைமை ஏற்பட்டிருந்தது.

மக்களுடைய தொடர்ச்சியான கோரிக்கையை அடுத்து குறித்த பகுதியில் இருந்த மக்களினுடைய காணியில் இருந்து இராணுவத்தினர் தங்களுடைய பொருட்களை அகற்றி குறித்த இடத்திலிருந்து வெளியேறுவதாக உறுதி அளித்து உடனடியாக இரவோடு இரவாக பொருட்களை எடுத்துக் கொண்டு சென்றுள்ளனர். (4)

# சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட மூவர் பொலிஸாரால் கைது



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் நீண்ட நாட்களாக இடம்பெற்ற சைக்கிள் திருட்டு சம்பவங்கள் தொடர்பில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 3 சைக்கிள்கள் 5 தண்ணீர் பம்பிகள் மீட்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு நட்டாங்கண்டல் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பல பகுதிகளில் சைக்கிள் திருட்டு மற்றும் தண்ணீர் பம்பிகள் திருட்டில் ஈடுபட்டு அவற்றை விற்பனை செய்துவந்த நபர் ஒருவர் மளிகை கடையில் நின்ற சைக்கிள் ஒன்றினை திருடி சென்ற வேளை பொதுமக்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்ட பின் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்

நட்டாங்கண்டல் பொலிஸ் நிலையபொறுப்பதிகாரி ரட்னநாயக தலைமையிலான குழுவினர் விசாரணை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன் பிரதேச பொதுமக்களின் ஒத்துழைப்புடன் கைது செய்யும் நடவடிக்கையினை முன்னெடுத்திருந்தார்கள்.

மிதிவண்டி திருட்டில் ஈடுபட்ட ஒருவர் அடையாளப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவருடன் தொடர்புடைய மாந்தை கிழக்கு பகுதியை சேர்ந்த மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடம் இருந்து 3 சைக்கிள்கள் 5 தண்ணீர் பம்பிகள் மீட்கப்பட்டுள்ளன.

இவர்களை நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நட்டாங்கண்டல் பொலிஸார் தெரிவித்தனர். (4-315)

# கைக்குண்டு மீட்பு

(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நகரப் பகுதியில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை குறித்த கைக்குண்டு கள்ளு தவறணைக்கு அருகாமையில் காணப்பட்டதையடுத்து பொது மக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

பின் குறித்த கைக்குண்டினை பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.



குறித்த குண்டு யுத்தகாலத்தில் பாவிக்கப்பட்டிருக்கலாம் எனவும் அது செயழிலந்துள்ள தாகவும் தெரிவித்தனர். (4-316)

# அதிபரை நியமிக்குமாறு பெற்றோர் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள மாங்குளம் மகா வித்தியாலயத்திற்கு கடந்த ஒன்றரை ஆண்டுகளாக அதிபர் நியமிக்கப்படாமல் இருப்பதாக பெற்றோர்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

துணுக்காய் கல்வி வலயத்தில் 1 ஏபி பாடசாலையான இப்பாடசாலையில் 600 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இப்பாடசாலையில் பணியாற்றிய அதிபர் 2020 ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்று சென்றதை அடுத்து இதுவரை நிரந்தர அதிபர் நியமிக்கப்படவில்லை. அதிபர்கள் இல்லாது இயங்கிய ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம், யோகபுரம் மகா வித்தியாலயம், பாலிநகர் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ள போதிலும் மாங்குளம் மகா வித்தியாலயத்திற்கு அதிபர் நியமிக்கப்படாமல் இருப்பது தொடர்பாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (4-350)

# பூநகரியில் சுற்றிவளைப்பு 2000 கிலோ மஞ்சள் மீட்பு

(முறிகண்டி)

சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட மஞ்சள் கையிருப்பு இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு பூநகரி வெட்டுக்காடு பகுதியில் சட்டவிரோதமான முறையில் இலங்கைக்குள் கொண்டு வரப்பட்ட மஞ்சள் ஒரு தொகையே இவ்வாறு இராணுவத்தினரால் மீட்கப்பட்டது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப் படையில் முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 66 ஆவது டிவிசன் பகுதியைச் சேர்ந்த இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டபோதே இவை மீட்கப்பட்டது. இந்த சுற்றிவளைப்பில் 65 பெரிய பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2000 கிலோ மஞ்சள் மற்றும் 03 பைகளில் இருந்த பூச்சிக் கொல்லி மருந்துகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த மஞ்சள் தொகை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படுவதுடன், மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-100-316)

## எரிபொருள் கோரி

# மூதூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் போராட்டம்

(தருமபுரம்)


மூதூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எரிபொருளைக் கோரியும் இராணுவத்தினரின் தரக்குறைவான செயற்பாடுகளுக்கு கண்டனம் தெரிவித்தும் பிரதேச செயலகத்துக்கு முன்பாக உள்ள பிரதான வீதியை மறித்து நேற்றுக் காலை மூன்று மணி நேரமாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் கமநல சேவை நிலைய அதிகாரிகள் போன்றோருக்கு இதுவரை அத்தியவசிய சேவையடிப்படையில் எரிபொருள்வழங்கப்படவில்லை.

இந் நிலையில் போராட்டத்தில் ஈடுபட்ட மூதூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் வழங்க loc எரிபொருள் நிலையம் நடவடிக்கை எடுத்தது. (4-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் வரிசையில் மற்றுமொரு உயிரிழப்பு



(கொழும்பு)

எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்த வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு பொறளை பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக வரிசையில் காத்திருந்த போதே குறித்த நபர் உயிரிழந்துள்ளார்.

அண்மைக்காலமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக மக்கள் எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயுவைப் பெற்றுக்கொள்ள வரிசையில் நாட்கணக்கில் காத்திருக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் இவ்வாறு வரிசையில் காத்திருந்த நிலையில் இது வரை 11 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# துருக்கி சரக்கு விமானம்

## கட்டுநாயக்கவில் விபத்திற்குள்ளானது



(கொழும்பு)

துருக்கி விமான சேவைக்கு சொந்தமான சரக்கு விமானம் ஒன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து துருக்கி நோக்கி புறப்பட இருந்த A 330 - 300 எயார் பஸ் வகையைச் சேர்ந்த விமானமொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

துருக்கி இஸ்தான்புல் நகரிலிருந்து பொருட்களை ஏற்றி வந்த விமானம், 45 மெட்ரிக் தொன் நிறையுடைய ஆடைகளை ஏற்றிக்கொண்டு நாட்டிலிருந்து மீண்டும் புறப்படவிருந்ததாக விமானநிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போது நிலவும் கடும் காற்று காரணமாக விமான த்திற்கு கொண்டுவரப்பட்ட கொள்கலன் ஒன்று விமானத்தின் இயந்திரத்தில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதன் காரணமாக குறித்த விமானம் நாட்டிலிருந்து வெளியேறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (நி)

# முச்சக்கரவண்டியை தவிர்க்கும் மக்கள்

(கொழும்பு)

தன்னிச்சையான கட்டண அறவீடு காரணமாக பொதுமக்கள் முச்சக்கரவண்டி பாவனையில் இருந்து விலகி வருவதாக முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுதில் ஜயருக் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

முச்சக்கரவண்டி கட்டண அறவீடு தொடர்பில் பயணிகள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். மக்கள் முச்சக்கரவண்டிகளை நிராகரிக்கும் நிலைக்கு வந்துள்ளனர்.

காரணம், எரிபொருளை பெற்றுக் கொள்ள முடியாத காரணத்தால் அதிக அளவில் முச்சக்கரவண்டி கட்டணங்களை அறவிடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

முச்சக்கரவண்டி சாரதிகள் தன்னிச்சையாக மற்றும் மோசடியான முறையில் பயணிகளிடம் அதிக அளவில் பணம் அறவிடுவதை தவிர்க்க வேண்டும்.

முச்சக்கரவண்டி மானி வாசிப்புக்கு ஏற்றவாறு கட்டணங்களை அறவிட வேண்டும்.

மோசடியாளர்களுக்கு இடமளிக்க வேண்டாம். இந்த சந்தர்ப்பத்தில் அவ்வாறானவர்கள் தலை தூக்குகின்றனர். இந்த தொழில் துறையை நாசமாக்குகின்றனர் என அவர் தெரிவித்தார். (நி)

## சர்வதேச நாணய நிதியத்துடனான

# பேச்சுவார்த்தை வெற்றி

(கொழும்பு)


சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தை வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.

அடுத்த கட்டமாக கடன் மறுசீரமைப்பு தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதனை நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் தெரிவித்தார். (நி)

# கர்ப்பிணி பெண்ணுக்கு உதவிய

## பொலிஸ் அதிகாரியின் நெகிழ்ச்சி செயல்



(இரத்தினபுரி)

இரத்தினபுரியில் கர்ப்பிணி பெண்ணுக்காக பொலிஸ் அதிகாரி ஒருவர் செய்த செயல் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கர்ப்பிணித் தாய் ஒருவரை இரத்தினபுரி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் போது, எரிபொருளின்றி வீதியில் முச்சக்கர வண்டி நின்றுள்ளது.

இதனை அவதானித்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தனது மோட்டார் சைக்கிளில் இருந்த எரிபொருளை வெளியே எடுத்து அதனை முச்சக்கர வண்டிக்கு வழங்கியுள்ளார்.

பொலிஸ் அதிகாரியின் இந்தச் செயல் நெகிழ்ச்சியடைய வைத்துள்ளதாக சமூக வலைத்தளங்களில் பாராட்டு தெரிவிக்கப்பட்டு வருகிறது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 240 | 350 |
| உருளைக்கிழங்கு | 190 | 200 | 250 | 220 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 450 | 400 |
| தக்காளி | 600 | 250 | 300 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 280 | 200 | 160 |
| கோவா | 280 | 300 | 320 | 350 |
| கரட் | 200 | 340 | 350 | 380 |
| பூசணி | 200 | 180 | 240 | 250 |
| புடோல் | 160 | 150 | 160 | 200 |
| வாழைக்காய் | 80 | 90 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 350 | 380 | 200-500 | 450 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 220 |
| பாகற்காய் | 350 | 400 | 350 | 500 |
| வெண்டிக்காய் | 160 | 160 | 150 | 280 |
| கருணைக் கிழங்கு | 180 | 220 | 240 | 240 |
| பயற்றங்காய் | 350 | 400 | 250 | 300 |
| லீக்ஸ் | 200 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 350 | 300 | 250 | 350 |
| கறிமிளகாய் | 400 | 400 | 480 | 500 |
| முருங்கைக்காய் | 450 | 450 | 400 | 400 |
| போஞ்சி | 400 | 350 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | — | 300 |
| கீரை - 1 பிடி | 120 | 60 | 80 | 80 |
| தேசிக்காய் | 300 | 350 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50-80 | 50-70 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 380 | 300 | 400 | 400 |
| முள்ளங்கி | 160 | 140 | — | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 90 | 50 | 40 |
| ஈரப்பலா | — | 150 | — | 120 |

# துவிச்சக்கரவண்டிகளுக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

சந்தையில் துவிச்சக்கர வண்டிகள் விற்பனைக்கு இல்லாமையால் அதன் விற்பனையாளர்கள் மற்றும் கொள்வனவாளர்கள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

அத்துடன் எவ்வாறாயினும், சில வர்த்தகர்கள் கையிருப்பில் உள்ள துவிச்சக்கர வண்டிகள் பல்வேறுப்பட்ட விலைகளில் விற்பனை செய்வதாக சந்தை வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

எரி பொருள் தட்டுப்பாடு காரணமாக சந்தையில் துவிச் சக்கரவண்டிகளுக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

இதன்படி, சாதாரண துவிச்சக்கரவண்டி ஒன்று 65 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாகவும் கியருடன் கூடிய துவிச்சக்கரவண்டி ஒன்று 77 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதாகவும் [illegible] தெரிவிக்கின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## கல் மனம் கரைந்ததே!

(நேற்றைய தொடர்ச்சி)

அப்போது ஜெயசேனன் "அந்தக் குங்குமத்தின் சக்திதான் என்ன?" என்று கேட்கவே பல்லூகனும் "என்னிடம் மந்திர சக்தி வாய்ந்த குங்குமச் சிமிழ் ஒன்று உள்ளது. அதில் அந்த குங்குமத்தைப் போட்டு வைத்துக் கொண்டால் உலகின் எந்த சக்தியாலும் என்னை ஒன்றும் செய்ய முடியாது.

அந்த முள்ளுகியும் எனக்கு அடங்கிப் போவாள், ஆனால் அவளிடமிருந்து அக்குங்குமத்தை எடுத்து வருவது எளிதல்ல. அவள் வசிக்கும் இடத்திற்குப் போவதே கடினம். கொதிக்கும் எண்ணெயில் குளித்த ஒருவனால் தான் அங்கு போக முடியும். பல சக்திகளையுடைய நான் கூட இந்த எண்ணெய்க் குளியலைச் செய்யத் துணியவில்லை. இதை யாராவது செய்வானா என்று எதிர்பார்த்துக் காத்திருந்தேன். அதற்காகவே சந்திரிகாவைக் கவர்ந்து வந்து அவளை விடுவிக்க யாராவது சக்தியுள்ள வீரன் வருவானா எனப் பார்த்தேன். நீ கிடைத்தாய். சரி, நீ முள்ளுகி இருக்கும் இட த்திற்குப் போய் அந்தக் குங்குமத்தை எடுத்து வருகிறாயா?" என்று கேட்டான். ஜெயசேன னும் "ஆகா போகிறேன்" எனவே பல்லூகனும் "இரவில் அவள் அழகிய பெண்ணாக மாறிப் படுத்துத் தூங்குவாள். அச் சமயத்தில் உன்னை நான் அவளது படுக்கை அறையில் கொண்டு போய் விட்டு விடுகிறேன். நான் ஒரு மூலிகையைக் கொடுக்கிறேன். அதை அவளது உதட்டில் தடவினால் அவள் சில விநாடிகளில் இறந்து விடுவாள். அந்தக் குங்குமம் அவளது தலையணைக்குக் கீழே தான் இருக்கும். அதை எடுத்துக் கொண்டு வந்து விடு" என்றான்.

ஜெயசேனன் ராட்சஸன் கொடுத்த மூலிகையை வாங்கிக் கொண்டான். பல்லூகன் அவனை மறுவிநாடியே தூக்கிக் கொண்டு போய் முள்ளுகியின் அறையில் விட்டு விட்டுப் போனான். ஜெயசேனன் அந்த மூலிகையை எடுத்து அவளது உதட்டில் தடவ மனமில்லாமல் அழகியான அவளைத் தட்டி எழுப்பினான். அவள் கண் விழித்துப் பார்த்து "யார் நீ? யாருமே வர முடியாத இங்கு நீ எப்படி வந்தாய்?" என்று கேட்டாள். ஜெயசேனன் தன் கதையை விபரித்து "நான் நினைத்திருந்தால் உன்னைக் கொன்றிருக்கலாம். ஆனால் கொல்லவில்லை. இந்த உபகாரத்திற்கு பதிலாக உன்னிடமுள்ள குங்குமத்தைக் கொடு" என்றான்.

முள்ளுகி அவன் தன்னைக் கொல்லாமல் விட்டது கண்டு மகிழ்ந்து "அதுசரி இந்தக் குங்குமத்தைக் கொடுத்தால் நீ இதை பல்லூகனிடம் கொண்டு போய்த்தானே கொடுப்பாய். நான் அதனால் அவனுக்கு அடிமையாக வேண்டி வரும். அதனால் நீ என க்கு உதவி செய்ய வேண்டும். நான் கொடுக்கும் மூலிகையை பல்லூகன் தூங்கும் போது அவன் உதட்டில் தடவி அவன் உயிரைப் போக்கிவிடு. (தொடரும்)

# சிலப்பதிகாரம்

## முக்கிய கதாபாத்திரங்கள் ஓர் அறிமுகம்



**கண்ணகி:**

கதையின் நாயகி. மனைவியான தன்னை மறந்து தாசியிடம் போய்ச் செல் வத்தை இழந்த கணவன் கோவலனை எரிக்கவில்லை. அதற்குக் காரணமான மாதவியை எரிக்கவில்லை. மதுரையைத் தான் எரித்தாள். ஏன்?

**கோவலன்:**

மனம் திருந்தி மனைவி கண்ணகியின் அருமை தெரிந்து அவளுடன் மீண்டும் சேர்ந்தான். ஒரு புது வாழ்வைத் தொடங் குவதற்காகத் தொழில் செய்யப் போன இடத்தில் அநியாயமாக் கொல்லப்பட்டான். ஏன்?

**மாதவி:**

கணிகையர் என்றாலே ஒழுக்கம் கெட்டவர்கள் அல்ல என்று நிரூபித்தவள். கோவலனைத் தவிர வேறோர் ஆடவனை மனத்தால்கூட எண்ணாதவள். கோவலன் மீது இருந்த அதீத அன்பே அவளை அவனிடமிருந்து பிரித்தது எப்படி?

**கவுந்தி அடிகள்:**

கண்ணகி மீதும் கோவலன் மீதும் அன்பு கொண்ட சமணத் துறவி உண்ணாவிரதம் இருந்து உயிரை மாயத்துக் கொண்டார் ஏன்?

**சாலினி:**

காட்டு வாசிகளான எயினர் குலத்துப் பெண். கண்ணகியும் கோவலனும் கவுந்தி அடிகளும் தன்னுடைய இனத்தாரின் துன்பத்துக்கு ஆளாகாமல் காப்பாற்ற ஒரு தந்திரம் செய்தாள். அந்தத் தந்திரம் என்ன?

**பொற்கொல்லன்:**

கோப்பெருந் தேவியின் கால் சிலம்பைத் திருடியவன். கோவலனை மிகச் சாதுர்யமாகத் தன் வலையில் வீழ்த்தி அவனுடைய மரணத்துக்குக் காரணமானவன். கோவலனை மட்டுமல்ல அரசனையும் அதிகாரிகளையும் கூட அவன் ஏமாற்றியது சுவாரஷ்யமான கதை. அது என்ன?

**பாண்டியன் நெடுஞ் செழியன்:**

நீதி த்வறாதவன் என்கிற நல்ல பெயரை அவ சரப் புத்தியால் ஒரு நொடியில் இழந்தவன். ஆனாலும் மக்கள் இன்று அவனை பழிப்பது இல்லை ஏன்?

**கோப்பெருந்தேவி:**

பாண்டியனின் மனைவி. கணவனுக்கு அவப் பெயர் ஏற்பட்டது தெரிந்த மாத் திரத்தில் உயிரை விட்டவள். ஆனாலும் இவளை விட கண்ணகி சிறப்பாகப் பேசப்படுகிறாள். ஏன்?

**மாடலன்:**

முக்காலத்தையும் உணர்ந்த வேத வித்தகன். கதையில் வரும் பல சம்பவங்களை நமக்குச் சொல்ல காப்பிய ஆசிரியர் சாமர்த்தியமாக பயன்படுத்தியிருக்கும் பாத்திரம். இதன் சூட்சுமம் என்ன?

**சேரன் செங்கொட்டுவன்:**

முதல் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த சேர மன்னன். காப்பிய ஆசிரியரின் மூத்த சகோதரன். கண்ணகிக்கு கோயில் கட்ட வேண்டும் என்று இவர் நினைத்ததற்கு அவருள் இருந்த ஒரு பெருமிதம் முக்கிய காரணம். அந்தப் பெருமிதம் என்ன?

**முற்பிறப்பின் வினைகள்:**

இக்கதையில் விரியும் ஒரு முக்கிய பாத்திரம் தான். கோவலன், பாண் டியன் இவர்கள் நீங்கலாக இன்னோர் அழிவுக்கும் முன்வினைப் பயன் காரணமாகச் சொல்லப்படுகிறது. அது எது?

**இளங்கோ அடிகள்:**

மேற் சொன்ன எல்லாக் கேள்விகளுக்கும் விடை எழுதி அதை ஒரு காப்பியமாக ஆக்கியவர். சிலப்பதிகாரத்தின் ஆசிரியர். கதையில் அதன் படைப்பாளியும் ஒரு பாத்திரமாகவே வருகிற புதுமையைப் பல நூறறாண்டுகளுக்கு முன்னரே செய்திருப்பவர். இவர் தோன்றுகிற காட்சி எது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை ஒப்புக்கொள்ளும் துணிவும், திருத்திக் கொள்ள விரும்பும் விருப்பமும் தான் வெற்றி பெறுவதற்கான இரு வழிகள்.

*– லெனின்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அறம் உரைக்கவல்ல அரசியல்வாதிகள் இல்லாத நாடு

நாடு என்றால் என்ன என்பது பற்றி வள்ளுவர் மிகத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

வள்ளுவப் பெருமானின் விளக்கத்தின்படி

*நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல*
*நாட வளந்தரு நாடு*

வேற்று நாடுகளிடம் எதனையும் வேண்டாமல், எல்லா வளங்களும் தன்னகத்தே கொண்டமைந்ததையே நல்ல நாடு என்பர்.

மாறாக பிறர் உதவியால் வாழும் நாடு நாடு அல்ல. இங்குதான் நாட்டின் சிறப்புப் பற்றித் தெரிகிறது.

ஆக, நாடு எனும் அதிகாரத்தில் வள்ளுவர் உரைத்ததன் பிரகாரம் இலங்கை என்பது நாடாக இருக்க முடியாது.

அதாவது எந்தவளமும் இல்லாமல் உலக நாடுகளிடம் இரந்து வாங்கி வாழுகின்ற இயல்பை இலங்கை கொண்டிருப்பதால் இலங்கை ஒரு நாடு என்ற தகைமையை இழந்துவிட்டது.

வள்ளுவர் கூறிய மேற்போந்த ஒரு குறளையேனும் இந்த நாட்டின் சிங்கள அரசியல்வாதிகளும் பௌத்த துறவிகளும் அறிந்திருப்பராயின் இலங்கைக்கு இந்த அவலம் ஏற்பட்டிருக்க மாட்டாது.

ஆம், வளம் பொருந்திய இலங்கை இன்று தன்னிடம் இருந்த வளங்களை, செல்வங்களை எல்லாம் இழந்து வறுமைப்பிணியால் வாடி நிற்கிறது.

வளம் பொருந்திய நாடு எல்லாச் செல்வங்களையும் இழந்து தரித்திரத் தோற்றத்துக்கு ஆளாகியமைக்கு காரணம் யாது என்று ஆராய்ந்தால், கொடும் போர் நடத்தி அப்பாவி மக்களைக் கொன்று குவித்தமை, தம்மிடம் வந்து சேர்ந்தால் உயிருக்கு உத்தரவாதம் என்று கூறி அதனை நம்பி வந்தவர்களை காணாமல் ஆக்கிய கொடுமையும் காணாமல் ஆக்கப்பட்டமையால், சம்பந்தப்பட்டவர்களின் உறவுகள் விடுகின்ற கண்ணீரும் சேர்ந்து இலங்கையின் செல்வத்தைத் தேய்க்கின்ற படையாயிற்று.

இதுதவிர, ஒரு நாடு அனர்த்தத்துக்கு ஆளாகுவதற்குக் காரணம் அப்பாவி மக்களைச் சிறையில் அடைத்து வதைப்பதாலாகும் என்பதை புராண இதிகாசங்கள் நமக்குப் போதிக்கின்றன.

மந்திரியாக இருந்த மாணிக்கவாசகரைப் பாண்டிய மன்னன் சிறையில் அடைத்ததன் காரணமாக வைகை நதி பெருக்கெடுத்து பாண்டிய நாட்டை அழிவுக்குட்படுத்தியது.

அதனால் மன்னனும் மக்களும் நலிவுற்றனர். பெருக்கெடுக்கும் நதி வெள்ளத்தைத் தடுத்து நிறுத்த, மக்கள் மண் சுமந்து பின்னர் முதுகில் அடி விழுந்து புண் சுமந்த மேனியராய் வதைபட்டனர். இதற்கெல்லாம் காரணம் மணிவாசகர் எனும் நல் மனிதர் சிறையில் அடைபட்டு வதைபட்டதனால் ஏற்பட்டதாகும்.

இதுபோன்றுதான் இலங்கையிலும் அப்பாவித் தமிழ் அரசியல் கைதிகள் மிக நீண்ட காலமாக சிறையில் அடைபட்டு விளக்கம் விசாரணை விடுதலையின்றி சிறைகளில் கிடந்து துன்புறுகின்றனர். எனினும் அவர்களின் அவலநிலையை உணரவல்லவர்கள் நம் நாட்டில் இல்லாத காரணத்தால் இன்று இந்த நாடு வளம் இழந்து செல்வம் தேய்ந்து கந்தறு நிலையில் காவடி எடுக்கிறது.

எனினும் இந்த உண்மையை – அறத்தை எடுத்துரைக்கவல்ல அரசியல்வாதிகள், பௌத்த துறவி இல்லாமை இந்த நாட்டின் பெருங் குறையாகும்.

ஆக, இலங்கை தன் வறுமையினின்றும் மீண்டெழ வேண்டுமாயின், போரில் கொன்றொழிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நடந்தது என்ன என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

சிறைகளில் அடைபட்டிருக்கும் தமிழ் அரசியல்கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

கூடவே சிறுபான்மை இன மக்களுக்கு சம உரிமை கொடுத்து அவர்களைத் துன்பத்தினின்றும் விடுவிக்க வேண்டும்.

இதைச் செய்கின்றபோது இலங்கை மீண்டும் வளம் பொருந்திய நாடாக மிளிரும் என்பது சத்தியம்.

## தேசிய அரசை நிறுவுவது தொடர்பில் குழுவொன்றை அமைக்க தீர்மானம்

(கொழும்பு)

அனைத்துக் கட்சி அரசாங்கத்தை நிறுவுவது தொடர்பான செயற்பாடுகளை முன்னெடுக்க பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தலைமையில் எதிரணியின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிரணி பிரதிநிதிகளின் பங்கேற்புடன் நேற்று பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட கட்சிகளுடன் அரசாங்கத்திலிருந்து வெளியேறி சுயாதீனமாக இயங்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

எனினும், ஜே.வி.பி இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருக்கவில்லை.

நேற்றைய கூட்டம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர பல்வேறு தரப்பினரும் தங்களது ஆலோசனைகளை முன்வைத்ததாக குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து விடயங்களையும் ஒன்றிணைத்து ஆராய்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவை ஒருங்கிணைப்பாளராக நியமித்து, ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவர் பிரதமராக வந்தாலும் தங்களுக்கு பிரச்சினை இல்லை. முழுமையான தேசிய ஒருமைப்பாட்டுடனான வேலைத்திட்டத்திற்கு முதலில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில், தற்போதைய அரசாங்கத்திற்கு இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய இயலுமை இல்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். (ம-7)

## வடக்கு – கிழக்கு பகுதிகளில் 95 வீதமான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன

நாட்டில் வட - கிழக்கு பகுதிகளில் 95 வீதமான கண்ணிவெடிகள் தற்போது அகற்றப்பட்டுள்ளதாக தேசிய கண்ணிவெடி செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அதன் பிரகாரம், 14 சதுர கிலோமீற்றர் நிலப் பகுதியில் மாத்திரமே தற்போது கண்ணிவெடி அகற்றப்பட வேண்டியுள்ளது.

2028 ஆம் ஆண்டிற்கு முன்னர் இலங்கையை கண்ணிவெடிகள் இல்லாத நாடாக மாற்ற அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் கண்ணிவெடி அகற்றும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதற்காக வருடாந்தம் பெறப்படும் உதவித் தொகை 17 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். (ம-7)

## மண்டைதீவு–பூமாவடி–பூம்புகார் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு-பூமாவடி-பூம்புகார் அருள்மிகு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய மாபெரும் வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் காலை 11 மணிக்கு அபிஷேகம் நடைபெற்று மாலை 6 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகும். (4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை 07 ஆம் திகதி காலை 8.00 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** நாரந்தனை தெற்கு, நாரந்தனை நீர்வழங்கல் திட்டம், புளியங்கூடல், சரவணை சந்தி, சுருவில் ஊர்காவற்றுறை, 52ஆம் பிரிவு இராணுவ முகாம் மிருசுவில், மிருசுவில் டோக்கியோ சிமெண்ட், மருதங்குளம்-எழுதுமட்டுவாழ், மிருசுவில் படித்த மகளிர் குடியிருப்பு, மிருசுவில் இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை-காத்தான் கோட்டம், கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், மறக்கறம்பளை-கணேசபுரம் ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.


## மின் கட்டமைப்பில் இடையூறு பொறியியலாளர்கள் இருவர் பணிநீக்கம்

கடந்த ஜூன் மாத தினம் ஒன்றில் மின்சார கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட இடையூறு தொடர்பில் இரண்டு பொறியியலாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மின் சாரத் துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர இதனை நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார். குறித்த தினத்தில் மின்சார உற்பத்திக்கான போதுமான நீர் இருந்தபோதும், டீசலைக் கொண்டே மின்சார உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் அனுமதியின்றி மின்சார விநியோகத்தில் தடையும் மேற்கொள்ளப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே இரண்டு பொறியியலாளர்களும் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



### வித்தியாசாகரைச் சந்தித்தல்

அவற்றின் ஊடே நடந்து வரும் போது குருதேவர் தன் சட்டை பட்டினில் கை வைத்து ம-விடம், "பட்டன் இல்லாமல் சட்டை திறந்திருக்கிறதே!" அதில் தவறு ஒன்றும் இல்லையே! என்று ஒரு குழந்தையைப் போல் கேட்டார். 'அது பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை உங்களுக்கு எதனாலும் பிரச்சினை வராது நீங்கள் பட்டன் போட வேண்டிய அவசியம் இல்லை' என்று ம- பதில் கூறினார். இதைக் கேட்டதும் ஒரு குழந்தையைப் போல் நிம்மதி அடைந்தார் குருதேவர்.

மேலைநாட்டு முறையில் கட்டப்பட்ட மாடி வீடு அது. பரந்த மைதானம், நாற்புறமும் சுவர், நடுவில் வீடு வித்யாசாகருக்கு அறுபத்திரண்டு அறுபத்துமூன்று வயது இருக்கும். குருதேவரை விட பதினாறு பதினேழு வயது மூத்தவர்.

கைத்தறி வேட்டியும் மெல்லிய கம்பளிச் சட்டையும் அறிந்திருந்தார். காலில் செருப்பு. ஒரிசா மக்களைப் போல் முடிவெட்டியிருந்தார். புதிதாக கட்டப்பட்ட பல்வரிசைகள் பேசும் போது பளிச்சிட்டன. பெரியதலை. எடுப்பான சற்றே சிறிய நெற்றி பிராமணர் அதனால் பூணூல் அணிந்திருந்தார். வித்தியாசாகர் பல அரிய குணங்கள் ப்டைத்தவர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 24

இது போன்ற சில குழுக்களை இரகசியப் பொலிஸார் கண்டுபிடித்தனர். அக் குழுக்களின் உறுப்பினர்கள் 1958 மற்றும் 1964 இற்கு இடையில் சிறையில் அடைக்கப்பட்டனர்.

இருவரும் பிராந்திய கட்சி அமைப்புகளில் கட்சிப் பணி செய்தவர்கள். 1961 ஆம் ஆண்டில், ஷெர்பிட்ஸ்கி உக்ரைனின் அமைச்சர்கள் குழுவின் (பிரதமர்) தலைவரானார். ஜூன் 1963 இல், அவர்



உக்ரைனுடன் பல காலகட்டங்களில் சேர்ந்த பகுதிகள்

**உக்ரைனின் விரிவாக்கம்**
**உரு-1**

*படம்-1க்கான விளக்கம்*

(1) 1654 க்கு முன் உக்ரைன்
(2) 1654 -1917 க்கும் இடையில் ரஷ்ய மன்னர்களினால் சேர்க்கப்பட்ட பிரதேசங்கள்
(3) நோவோரோசியா - 1922 இல் லெனினால் சேர்க்கப்பட்ட பிரதேசங்கள்
(4) கிழக்கு கலீசியா - 1939-1940 இல் சேர்க்கப்பட்ட பிரதேசங்கள்
(5) வடக்கு புகோவினா 1940 இல் சோவியத் ஒன்றியத்தால் கைப்பற்றப்பட்டு சேர்க்கப்பட்ட பிரதேசங்கள்
(6) டிரான்ஸ்கார்பதியா - 1945 இல் செக்கோஸ்லோவாக்கியாவில் இருந்து எடுக்கப்பட்டு சேர்க்கப்பட்ட பிரதேசங்கள்
(7) கிரிமியா - குருஷ்சோவினால் 1954 இல் சேர்க்கப்பட்ட பிரதேசம்

அரசின் கட்சிக் கொள்கைக்கு வெளிப்படையான எதிர்ப்பு சாத்தியமற்றதாக இருந்தது. இதனால் உக்ரைனிய மொழி மற்றும் கலாச்சாரத்தின் பாதுகாப்பு என்பன தாய்மொழியைப் போற்றும் கவிதைகள் ஊடாகவும் உக்ரைனிய மொழிப் பாடப்புத்தகங்கள் கிடைக்காதது பற்றிய புகார்கள் அளிப்பதன் ஊடாகவும் மற்றும் உக்ரைனிய பருவ இதழ்களுக்கு சந்தா கோருதல் போன்று பொதுவாக எதிர்ப்புக்கள் மறைமுகமாக வெளிப்படுத்தப்பட்டது.

குருஷ்சேவின் கடைசி ஆண்டுகளில் அதிகாரத்தில் இருந்த இரண்டு நபர்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தனர். அவர்களின் பெயர் பெட்ரோ ஷெலஸ்ட் மற்றும் வோலோடிமிர் ஷெர்பிட்ஸ்கி ஆகும். இவ் இருவரும் கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக உக்ரைனின் அரசியல் நிலப்பரப்பில் ஆதிக்கம் செலுத்தியவர்கள். பெட்ரோ ஷெலஸ்ட் 1908 இல் கார்கிவ் அருகே ஒரு கிராமத்தில் உக்ரைனிய விவசாய குடும்பத்தில் பிறந்தவர். வோலோடிமிர் ஷெர்பிட்ஸ்கி ஒரு உக்ரைனிய சோவியத் அரசியல்வாதி.

மொஸ்கோவிற்கு பதவி உயர்த்தப்பட்டதும், உக்ரைனில் அவருக்குப் பிறகு ஷெலஸ்ட் உக்ரைனின் அமைச்சர்கள் குழுவின் (பிரதமர்) தலைவரானார். உக்ரைனின் அமைச்சர்கள் குழு (மந்திரிசபை) என்பது பொதுவாக உக்ரைன் அரசாகும். இது உக்ரைனில் நிர்வாகத்தின் மிக உயர்ந்த அதிகார அமைப்பாகும்.


பெட்ரோ ஷெலஸ்ட்
சோவியத் உக்ரைனியத்
தலைவர் (1963-1972)


வோலோடிமிர், ஷெர்பிட்ஸ்கி
சோவியத் உக்ரைனியத்
தலைவர் (1972-1989)

1964 ஆம் ஆண்டில், கிரெம்ளின் தலைமை நிகிதா குருசேவ்வை அதிகாரத்திலிருந்து அகற்றியது. அவருக்குப்பதிலாக லியோனிட் ப்ரெஷ்நேவ் சோவியத் ஒன்றியத்தின் முதல் செயலாளராகவும், அலெக்ஸி கோசிகின் அதன் பிரதமராகவும்

நியமிக்கப்பட்டனர். ஜூன் 1963 இல், உக்ரைனில் ஷெலஸ்ட் கட்சித் தலைவராக (பிரதமராக) ஆனார்.

**1964 ஆம் ஆண்டில், கிரெம்ளின் தலைமை நிகிதா குருசேவ்வை அதிகாரத்திலிருந்து அகற்றியது, அவருக்குப்பதிலாக லியோனிட் ப்ரெஷ்நேவ் சோவியத் ஒன்றியத்தின் முதல் செயலாளராக நியமிக்கப்பட்டார்.**

## சோவியத் ஒன்றியத் தலைவர் லியோனிட் ப்ரெஷ்நேவ் காலம் (Leonid Brezhnev) (1964-1982)

லியேரனிட் இலிச் ப்ரெஷ்நேவ் (Leonid Ilyich Brezhnev) ஒரு சோவியத் அரசியல்வாதி ஆவார், ப்ரெஷ்நேவின் இனம் அவரது பாஸ்போர்ட் உட்பட சில ஆவணங்களில் உக்ரைனியனாகவும், மற்றவற்றில் ரஷ்யனாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் சோவியத் ஒன்றியத்தை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக 1964 தொடக்கம் 1982 வரை வழிநடத்தினார். மொஸ்கோவில் புதிய தலைமை குருஷ்சேவின் பல பரவலாக்கும் நடவடிக்கைகளை விரைவாக மாற்றியமைத்தாலும், ஆரம்பத்தில் அது ரஷ்யரல்லாதவர்களிடம் அதிக உணர்வினைக் காட்டியது. இது மொஸ்கோவின் தேசியக் கொள் கையில் இருந்து பின்வாங்குவது போல் தெரிந்தது.

**லியோனிட் இலிச் ப்ரெஷ்நேவ் (Leonid Ilyich Brezhnev) ஒரு சோவியத் அரசியல்வாதி ஆவார், ப்ரெஷ்நேவின் இனம் அவரது பாஸ்போர்ட் உட்பட சில ஆவணங்களில் உக்ரைனியனாகவும், மற்றவற்றில் ரஷ்யனாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் சோவியத் ஒன்றியத்தை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக 1964 தொடக்கம் 1982 வரை வழிநடத்தினார்.**

லியோனிட் இலிச் ப்ரெஷ்நேவ்வின் புதிய ஆட்சியானது "மலரும்", "ஒன்றாக வரைதல்" மற்றும் "இணைவு" என்ற கொள்கையை அறிமுகப்படுத்தியது. இது ஒவ்வொரு நாட்டினதும் பல்வேறு சோவியத் தேசிய இனங்களை சிறந்த கூறுகளை ஒன்றிணைத்து ஒரு சோவியத் தேசியமாக இணைக்கும் கொள்கையாகும்.

இந்தக் கொள்கை உண்மையில், ரஷ்யாமயமாக்கல் கொள்கையை மீண்டும் அறிமுகப்படுத்துவதாக மாறியது. இது விளாடிமிர் லெனினின் கூற்றுப்படி, சோவியத் யூனியன் கம்யூனிசத்தின் இறுதிக் கட்டத்தையும், மனித வளர்ச்சியின் இறுதிக் கட்டத்தையும் அடையும் போது, சோவியத் தேசிய இனங்களின் ஒருங்கிணைப்பு நடக்கும் என்ற கருத்துப் பாதையில் செல்ல


லியோனிட் ப்ரெஷ்நேவ்
Leonid Brezhnev
சோவியத் ஒன்றியத்
தலைவர் (1964-1982)

முனைவதைக் காட்டியது. இக்கொள்கைகளை பின்பற்றி சோவியத் யூனியன் அதிகாரிகள் சிலர் "போலி இறையாண்மை" என்று கூறும் சோவி யத் குடியரசுகளை ஒழித்து, ஒரு தேசியத்தை நிறுவுவதற்கு அழைமுப்பு விடுத்தனர். இதனை உக்ரைன் உட்பட பல சோவியத் ஒன்றிய நாடுகள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இதே நேரத்தில் உக்ரைனிய வரலாற்றிற்கு அர்ப்பணிக்கப்பட்ட புதிய பத்திரிகைகள் மற்றும் தொடர்கள் மேன்மேலும் தோன்றின. நினைவுச்சின்ன கலைக்களஞ்சிய வெளியீடுகள் தொடங்கப்பட்டன.

இத்தகைய முயற்சிகள் கம்யூனிஸ்ட் கட்சி சித்தாந்தவாதிகள் மற்றும் பழைமைவாத கலாசார ஸ்தாபனத்தின் கடுமையான தாக்குதலுக்கு உள்ளானது. இதனால் அறிவிக்கப்பட்ட வெளியீடுகள் வெளிவரத் தவறிவிட்டன, வெளியிடப்பட்ட படைப்புகள் புழக்கத்தில் இருந்து விலக்கப்பட்டன, மேலும் ஏராளமான கலைப் படைப்புகள் அழிக்கப்பட்டன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்ணெண்...

சாரம், நீர் மற்றும் எரிபொருள் என்பவற்றை குறைந்த விலைகளிலேயே அரசாங்கம் வழங்கி வந்தது.

மண்ணெண்ணெய் தற்போது 87 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படுகிறது. அதற்காக 420 ரூபாய் செலவு ஏற்படுகிறது.

எனவே, எதிர்வரும் நாட்களில் கட்டாயமாக மண்ணெண்ணெய் விலை அதிகரிக்கப்பட வேண்டும் என்றார். (ம-7)

## ஆயிரம் பஸ்கள்...

வைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதற்கு மேலதிகமாக பாடசாலை மாணவர்களின் போக்குவரத்திற்காக புதிதாக 100 பஸ்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பொதுப் போக்குவரத்திற்காக தற்போது பாரிய கேள்வி நாட்டில் நிலவுகிறது. எனினும், அதற்குத் தேவையான அளவு பஸ்கள் இல்லை எனவும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார். (ம-7)



















## பொருளாதார...

வர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆறு மாதங்களில் நாட்டை மீட்டெடுத்த பின்னர் பொதுத் தேர்தலுக்குச் சென்று நிலையான அரசாங்கத்தை கட்டியெழுப்புவதே தமது திட்டம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## மக்களை மேலும்...

பத்தினரே.

எனவே, பெரும்பான்மையான மக்களின் நம்பிக்கையை அவர்கள் இழந்துள்ளதால் தொடர்ந்தும் ஆட்சியில் நீடிப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்துத் தெரிவித்த பேராயர் மேலும் கூறுகையில்,

"பதவியில் உள்ள ராஜபக்ஷக்கள் உடனடியாக பதவி விலக வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில் இனியும் பதவியில் நீடிக்க அவர்களுக்குத் தார்மீக உரிமை இல்லை.

மக்களுக்கு மேலும் துன்பத்தை ஏற்படுத்தாமல் ஆட்சி அதிகாரத்தை அவர்கள் ஒப்படைக்க வேண்டும்" என்றார். (ம-7)

## சர்வதேச நாணய...

இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தையில் பல இணக்கப்பாடுகளை எட்டக்கூடியதாக இருந்தது.

அதன்படி, நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு முன்னெடுக்கப்படும் வழிமுறைகள் குறித்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இதேவேளை, எதிர்வரும் இடைக்கால வரவு-செலவுத்திட்டத்தின் ஊடாக மக்களுக்கு நிவாரணம் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தமது உரையின்போது குறிப்பிட்டார். (ம-7)

## எரிபொருள்...

களை மையப்படுத்தி, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தரப்புக்களும் முன்வைத்துள்ள கோரிக்கைக்கு அமைய இது குறித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆராய்ந்து வருவதாக அறிய முடிகிறது.

இதுகுறித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எஸ். ஹெட்டி ஆராச்சியிடம் வினவியபோது, இது குறித்து இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை என தெரிவித்ததுடன் அடுத்து வரும் நாட்களில் அவ்வாறான ஒரு தீர்மானம் எட்டப்பட வாய்ப்புள்ளது எனக் குறிப்பிட்டார். (ம-7)

## ரணில் - சஜித்...

பாராளுமன்றத்தில் நேற்று நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் பிரதமர் விசேட அறிக்கையொன்றை விடுத்தார்.

இதன்போதே இருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

நாட்டின் நிதி நிலைமை பற்றிய உரைக்கு பின்னர், ஏற்றுக்கொள்ளப்பட்ட நிகழ்ச்சி நிரலைப் பொருட்படுத்தாமல் கருத்துத் தெரிவித்த பிரதமருக்குப் பதிலளிக்க தமக்கு உரிமை உண்டு என சஜித் வலியுறுத்தினார்.

**சஜித்-** "நாட்டின் பொருளாதார வீழ்ச்சி குறித்து பேசி முடித்த பிரதமர் தோல்வியடைந்துள்ளார். எரிபொருள் மற்றும் எரிவாயுவை கொள்வனவு செய்வதற்கான நீண்டவரிசையில் அவர் தீர்வைக் கொண்டு வரவில்லை. விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கமே கட்டார் தொண்டு நிதியை தடை செய்தது. இப்போது அரசாங்கம் எரிபொருள் வாங்க பிச்சைக் கிண்ணத்துடன் செல்கிறது".

**ரணில்:-** "கட்டாரில் இருந்து எரிபொருளை வாங்க முடியாது. எரிபொருள் உள்ள நாடுகளிடம் இருந்து எரிபொருளை வாங்குவதற்காக பிரேமதாஸவின் தந்தையினால் நான் அனுப்பப்பட்டேன்"

**சஜித்:-** "எனது தந்தை விக்கிரமசிங்கவை தனது 200 ஆடைத் தொழிற்சாலை திட்டத்தின் தலைவராக்கினார். எனது தந்தைதான் விக்கிரமசிங்கவுக்கு வாய்ப்புகளை வழங்கினார்."

**ரணில்:-** "ஜனாதிபதி பிரேமதாஸவின் அமைச்சரவையில் நான் ஒரு போதும் ஆடைத்தொழில் துறை அமைச்சராக இருந்ததில்லை. யு.பி. விஜேகோன் ஆடைத் தொழிலுக்குப் பொறுப்பாக இருந்தார்.

சஜித்துக்கும் மற்றவர்களுக்கும் எப்படி அதிகாரத்தை கைப்பற்றுவது என்று தெரியவில்லை. ஒருவர் அதிகாரத்தைப் பற்றிக் கொள்ள வேண்டும், பின்னர் அதைப்பிடிக்க வேண்டும். பதாகைகளை பிடித்துக் கொண்டு ஆட்சிக்கு வர முடியாது.

பிரேமதாஸ மற்றும் பிறரை என்னுடன் சேருமாறு கேட்டுக் கொள்கிறேன், அவர்களுக்கு அரசியல் பாடம் கற்பிப்பேன்"

**சஜித்:-** "விக்கிரமசிங்க நன்றாக பாடம் படித்திருப்பார் என்று நாங்கள் நினைத்தோம். அவரது கட்சி ஒன்றுமில்லாமல் போய்விட்டது, அவர் தேசியப் பட்டியலில் இருந்து பாராளுமன்றத்திற்கு வர முடிந்தது. இப்போது பின்கதவினால் பிரதமரானார்."

**ரணில்:-** "பிரேமதாஸவின் தந்தையை பதவி நீக்கத்தில் இருந்து காப்பாற்றியது நான்தான். இவ்வாறு இருவரும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். (ம-7)

## பிரச்சினைகளு...

பொருளாதார நிலை குறித்து பிரதமர் விசேட அறிக்கையொன்றை விடுத்தார்.

அதற்கு பதிலளித்து சபாநாயகரின் எதிர்ப்புக்கு மத்தியிலும் உரையாற்றிய அவர், இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

"சபாநாயகரே மரபை உடைத்து அவரை பேச அனுமதித்தீர்கள். நியாயமாக இருங்கள். தயவு செய்து எதிர்க்கட்சிகளுக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள். எங்கள் வாயை அடைக்க நீங்கள் முயற்சிக்காதீர்கள். பிரதமரின் அறிக்கைக்கு நான் பதில் சொல்ல வேண்டும்.

சபாநாயகரே என்னை வாயடைக்க வராதீர்கள். நீங்கள் கத்துவதைக் கண்டு நான் பயப்படவில்லை. நன்றாக நினைவில் கொள்ளுங்கள். சத்தம் போட்டாலும் பேசும் தைரியம் எனக்கு இருக்கிறது.

பெற்றோல், டீசல் வரிசையில் காத்திருக்கும் மக்களுக்கு தீர்வு எங்கே? தோட்டத் தொழிலாளர்களுக்கு தீர்வு எங்கே? ஏற்றுமதித் துறையின் வீழ்ச்சிக்கு என்ன தீர்வு?" என அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (ம-7)

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண் மகிழ
27 - 07 - 1949

கண் நெகிழ
06 - 06 - 2022

அமரர்

## அருளப்பு தவமணி



வையத்துள் வாழ்வாங்கு
வாழ்ந்து - இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எம் குடும்ப குலவிளக்கே!
முடிந்தது நாட்கள்
முப்பத்தொன்று
முடியவில்லை உம்மை
நினைக்காமல் இருக்க!
சொன்ன செய்தி
காதை துளைக்க
கண்கள் காய்ந்து
நாவறண்டு
இதயம் ஒரு கணம் ஓய்ந்து
அவயவங்கள் அசைய மறுத்து
அசைவற்று போனோம்.
எள்ளளவு கூட எண்ணவில்லை
ஏமாற்றி செல்ல ஏன் இந்த அவசரம்?
தரணியிலே எம்மை
தனியாக தவிக்கவிட்டு
தந்தை தம்பியுடன்
குதூகலிக்க
விண்ணகம் சென்றீரோ?
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்.
உம் ஆத்மா சாந்தியடைய
எம் முடன் விட்டு சென்ற
உம் நினைவுகளை
மலர் தூவி அஞ்சலிக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரடியாகவும் தொலைபேசி, தொலைநகல் வாயிலாகவும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாதைகள், மலர்வளையங்கள் மூலமாகவும் மலர்மாலைகள் சாத்தியும் அஞ்சலி செலுத்தி ஆறுதல்களையும் அனுதாபங்களையும் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (C-4580)

இவ்வுலகில் தங்கள்
வழிகாட்டலில் வாழும்...
குடும்பத்தினர்

8ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.
077 146 7014

# சாதாரண மக்களின் வேதனை ரணிலுக்கு தெரியவில்லை

## ஜே.வி.பி. தலைவர் அநுர

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சாதாரண மக்களின் வேதனை மற்றும் பிரச்சினை தெரியவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க இந்தக் குற்றச்சாட்டை தமது பாராளுமன்ற உரையின்போது சுமத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தின் பிரதமர் மற்றும் அமைச்சர்கள் தொடர்ந்தும் குற்றச் சாட்டுக்களை முன்வைத்து வருகின் றனர்.

எனினும் தாம் வெளியிட்ட கருத் துக்கள் வேறு அர்த்தம் கொண்டு விமர் சனங்கள் வெளியிடப்பட்டு வருவதாக அநுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத் தியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை பொறுத்த வரையில், அவர் அரசியல் விளையாட் டுக்களை மேற்கொண்டு வருபவர். அத் துடன் தற்போது அமர்ந்திருக்கும் ஆச னமும் அரசியல் விளையாட்டுக்களின் மூலம் பெறப்பட்ட ஆசனமாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மே11 ஆம் திகதியன்று தமது கட்சி முன்வைத்த யோசனைகளையே தாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருவதாக அநுரகுமார குறிப்பிட்டார். ஜனாதிபதி கோட்டாபய விலகவேண்டும்.

இதனையடுத்து 225 பேரில் தெரிவு செய்யப்பட்டவர்களுடன் இணைந்து அர சாங்கம் அமைக்கப்படவேண்டும்.

இல்லையேல் அமைக்கப்படும் அர சாங்கத்துக்கு எதிர்க்கட்சியில் இருந்து ஆதரவு தருவதாக தாம் தொடர்ந்து வலி யுறுத்துவதாக அநுரகுமார குறிப்பிட்டார்.

ஆழமான பொருளாதார பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இது நாட்டின் அரசியல் கலாசாரம் காரணமாகவே உருவானது.

இந்தநிலையில் 6 மாதங்களில் பொது மக்களின் எரிபொருள், எரிவாயு மற்றும் உணவுத்தட்டுப்பாட்டை நீக்கவேண்டும்.

இதனையடுத்து 6 மாதங்களுக்கு பின்னர், தேர்தல் ஒன்றுக்கு சென்று மக்களின் அங்கீ காரத்தை பெற்ற அரசாங்கம் தெரிவு செய்யப்படவேண் டும் என்பதையே தாம் கூறியதாக அநுரகுமார குறிப் பிட்டுள்ளார். (ம-7)


## வீடு வாடகைக்கு தேவை

யாழ்.நகரை அண்மித்த பகுதியில்
சிறிய குடும்பம் ஒன்று வசிக்கக்கூடிய
சகல வசதிகளும் கொண்ட
வீடு வாடகைக்குத் தேவை.
வீட்டை வாடகைக்கு வழங்கக்
கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: (இ)
077 745 1625

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளி நொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித் துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12073)
076 825 7716 (ஆகாஸ்)

## சைக்கிள் விற்பனை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை

சைக்கிள் விற்பனை செய்யும் ஸ்தாபனம் ஒன்றுக்கு
சைக்கிள் திருத்த வேலைகள் தெரிந்த
வேலையாட்கள் உடனடியாகத் தேவை.
( சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் ) (C-4579)
021 223 2797

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும் (C-4569)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER
✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)
(C-4569)
V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து
உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம்
0777-068-777

## ஐரோப்பிய நாடொன்றிற்கு செல்ல விருப்பமா?

## 5 நாட்களில் இலங்கையிலிருந்து பயணமாகலாம்

ஐரோப்பிய நாடுகளை Poland, Azerbaijan, Lithuania, Hungary
போன்ற நாடுகளில் 6 மாத கல்வியின் பின்னர் நீங்கள் விரும்பிய
நாட்டிற்கு செல்ல முடியும்.
♦ தகைமை தேவையில்லை
10 பேருக்கு மட்டுமே இவ் வாய்ப்பு
Hot line : 071 071 6979 (12060)
Winstar Consultants Pvt Ltd
No.45, Vembadi Street,
Jaffna.
முக்கிய குறிப்பு :
முன்னனுமதி பெற்று நேரத்தினை
உறுதிப்படுத்திய பின்னர் நேரில் வரவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.